302

78

202

தேதி: [illegible]
ஓலைச் சுவடியின் பெயர்: "வைத்திய அட்டவணை கட்டு-3"
உரிமையாளரின் பெயர்: எ.முத்தையா.
இடம்: அப்பு வைத்தியசாலை, வடிவேஸ்வரம், நாகர்கோவில்.

ஃஃஃ

* இதில் நோய் மூலங்களும் பிறவும் விடுக்க மருந்தும் செய் முறையுமே எழுதப் பட்டுள்ளது.

ஃஃ

<u>நீரழிவுக்கு அமிர்த சர்க்கரை:-</u>

30. தின்னிய சீந்தித் தண்டு சிறுகவே நறுக்கி யங்கே
ஒன்றித்து இடித்து நீயும் முதகத்தில் கரைத்துப் பின்னை
பண்ணிய சீலை தன்னி லிப்படி மத்த நாள்
தன்னையே யிடித்த மாவை தறிச் சீலையில் சட்டிக் காக்கே.

31. ஆக்கிய மருந்து தன்னைச் சுருதியா யுலத்தி வைத்துத்
தூக்கிய அமுக்கிராவும் ஆவரம் பட்டை முத்தம்
நீக்கிய அதமாவும் நிலப் பனைக் கிழங்கும் நெல்லி 302
தக்கவே இடித்த மாவைத் தாமுறுஞ் சரக்கைக் கேளே.

32. திரிகடுகு அதிவிடையஞ் சீரகம் நாகப்பூவுஞ்
குறி கூவை கிராம்பு கோட்டம் குங்குமம் அதிமதுரம்
பெறுஞ் சீனி முந்திரிகை பேரீந்து சாதிக்காயும்
நறுஞ் சாதிபத்திரியும் நால்க் கழஞ்சே வகையோ ரொன்று.

33. ஒன்று யிடித்து மாவாக்கி யுகந்தே தெள்ளி வடி கொண்டு
தின்றே வெருகடிப் பிரமாணம் திகழ் வெள்ளாட்டி நெய்யதனில்
ஒன்றே இருபது நாட் கொள்ள வுயர் மூவெழு பிரமியமும் மன்றே
மாறல் சுர முதலாய் மருவிக் கொடியில் கடுப்பு விடும்.

34. அன்றே யமுத சர்க்கரை தானன் வாய்க் கொள்ள ஆவின் னெய்யில்
நின்ற சுரமும் வறட்சி சுரம் நெருங்கும் தண்ணீர்த் தாபமும் போய்க்
கன்று ஈன்ப பாலதிலே கன்றக்கு விழுங்கத் திருமி முதல்.
நின்ற வெப்பு முதலெலிதாய்த் தீருங் கண்டரே.

35. <u>சகல களிச்சலுக்கு மேகாதி யுண்டை:-</u>

ஆவரை பந்தின் நெல்லி மனம்தன் கொன்றை வில்வம்
நீ விரை வித்து மக்கி நெருஞ்சியுஞ் நுரை வித்தும்
மாவரை அஞ்சு மாக்கி மக்கியு பிக்கி விற்றும்
மூவரையாகக் கொள்ளு முறைப்படி மருந்து யின்னம்.

36. பெரு மரப்பட்டை நல்வல் பேரிலவோடு குருவைப் பட்டை
பரு மரவேலம் பட்டை பாளை பூவரசோ டெட்டும்
பெருகிடு மேதி மோரில் பிரட்டியே அமுக்க நீயும்
கருதிரத் தக்கங் கட்டி சரக்கது வைக்கக் கேளே.

37. கடுகொடு காந்தம் மஞ்சள் காரதி விடையங் மக்கில்
சடையொடு மாஞ்சி காலி சாதிப்பத்திரி குருசாணி
கடுமனி கர்க் கட்டி களிப் பாக்குச் சாதிக்காயும்
மடல் பெறு அதிலே ரொன்ப மைஞ் களஞ்சாகக் கட்டே.

38. கட்டிய கற்க மெல்லாங் கொடுந் தயிர் மேதி விட்டங்
காட்டியே அரையும் பின்னை ஆவரைந் தயிலம் விட்டு
மோட்டியே யரைக்க நீயும் உண்டை பார்க்களவு செய்து
நாட்டினில் வழங்கு மந்த நல்லெண்ணெயில் நனையப் போடே..

39. என்னையிா றி யேழு நாள்ச் சென்று முண்டை யொன்று
தின்னி மேதி மோரில் திகழ்வே யரைத்து நீயு
மென்னையோர் கறள்டி விட்டங்கியல் பெறக் கொண்டாயாகில்
தன்னியல் கோப மாறந் தாபமுந் தீருந் தானே.

40. <u>மேகாதி யுண்டை:-</u>

ஆவரை அல்லி வித்து மதின் கொழுந்தான வேரு
மாவரை மருந்து பூலாவகைக் கொரு பிடியாய்க் கொண்டு
தீவிரை தக்கி வித்துந் திகழ் மேதி மோரு தன்னில்
யாவரும் புகழத் தானே அனலெரித்த வியும் புட்டமாய்.

41. அவித்திடு மருந்திலோடே யவினரைக் கழஞ்சு கட்டி
பவித்திடு மோருங் கற்கம் பரியவே அரைத்துப் பின்னைச்

செவித்திடுங் கொற்கஞ் சாற்றில் கிழவே அரைத்து நீயுங்
குளித்திடு களச்சித் தண்டி கொள்ளு பானங் கேளே.

42. மேதி மோரில் நீ கொடுக்க விளையும் பிற மேகந் தீரும்
மேதி மோரில் கொடுக்கவே தான் வீறு தண்டில் கடுப்பு விடு
மேதி மோரில்க் கொள்ளவே தான் மேகஞ் சலக் கழிச்சல் தீரும்
மேதி வெண்ணையில்க் கொள்ளவே விளையுங் கல்ல விளையருமே.

43. அருமே நன்மாங்கிழ க்கிடைப்புத் தீரு மதில் கொண்டால்
வெருமே தீரு முள்ளுருக்கி வெள்ளாட்டின் கொழுப்புத் தாறுருக்கிக்
குழவை யரிசி மாவுடனே கலை நீறு மதில்த் தாவிப்
பெருமே யுண்டை பொடி செய்து பேதாய் ஈவிக் குடிக்க நன்றே.

44. நன்றே கிராம்பு சாதிக்காய் நல்ல லவங்கப் பத்திரியும்
மூன்று களஞ்சு வகைக் கொன்று பூரி மேதித்தி யிரு தன்னில்
குன்ற வரைத்து முன் மருந்தைக் கட்டி யரைத்துக் கொடு நீயும்
நின்றே தீரும் வற்றிடவும் நெருங் குமழக்கி போகவுமே.

45. மேதியின் தயிரு மோரும் வெண்ணெயுங் கூட்டி மத்தி
ஏதி நல்வெண்ணை விட்டு யிதுடன் குழப்பிப் பின்னை
நீதியு முருண்டை ரெண்டு நீற்றிரு நேரங் கொள்ள
பாதிக்கும் பாணி தீரும் பர்தாகந் தாகம் போமே.

<u>சலக்க் கழிச்சலுக்கு குடிநீர்</u>:-

46. ஆவரை யரசம் பட்டை யல கடலிருஞ்சிப் பட்டை
மாவரை மருதம் பட்டை மன்மதன் கொன்றை வேலு
மேவரை யிலவம் பட்டை இலந்தை வேர் சிறுவைப் பட்டை
தேவரை தேற்றுன் பட்டை சேர் சரி பலங்கள் மூன்றே.

47. ஊன்ற யிடித்த முக்குறுணி யுதகமதிலே தாவிட்டுக்
கோன்ற வுக்கிலின் விறகிட்டுச் சொல் நீ யொழுக்குத் தீயெரித்து
முன்றொன்றுக்கிக் கான் முடிக்க முதிர்ந்த பிறளயந்தான் மாமஞ்
சான்றே வழுத்தி தானடங்கும் தண்ணீர்த் தாகந் தானடங்கும்.

48. <u>மேக கோடாலிக் குளிகை</u>:-

காந்த பிரதங் காரீயங் கிராம்பு திப்பிலி சாதிக்காய்
போந்த ஆவரை கொத்தமல்லி புகலக் கருங் காலி பிசின் காரம்
மாந்த காரம் அக்கிரா விரை மாஞ்சி புங்கம் பிசின் கொன்றை
வேந்தாளம் வெள்வேல் கருவேல் யிலவம் பிசிர் மிருமல்லி.

49. மல்லிப் பிசிரும் விளாம் பிசிரும் வளமா முருங்கை கவிளையும்
அல்லியரும்புந் தன்னோடே ஆக வகைக்குச் சரி களஞ்சு
மெல்ல மேதித் தயிர்த் தண்ணீர் விட்டே யரைத்து
மேவிய பின் செல்லா வரையின் சாற்றரைத்துச் சேரு முருண்டை மஞ்சாடி.

50. குழவை மாவை யாமாக்குக் கட்டி யுருண்டை ஒன்றித்த பின்
முறவமேதி தயிர் தண்ணீர்முகிரக் குளைக்குக் கொண்டாக்கால்
அருமே நீரும் வத்தி விடும் ஆறுத் தாக மழத்தியும் போம்
சிறு மின்னிடையீர், பிரமேகந் தீரும் வகைக்கே யருபானம்.

51. அல்லி யரும்பு ஐங்கழஞ்சு அதிலேருருண்டை ஒன்றதிட்டு
மெல்ல வரைத்து மேதி வெண்ணை மேவிக் குடிக்கப் பிற் மேக மெல்லா
மிழந்த தாரோடு மேஞ்சிக் குத்தி தானேகும்
வெல்லத்துடனே தான் குடிக்க வெடிக்கும் ஓலை வேரமே.

52. <u>மேகத்துக்குக் குளிகை</u>:-

சாதிலிங்க மனோசிலை கல் மதஞ் சாதிக்காயுஞ் சலந் தளிக் கொட்டையுஞ்
சாதிபத்திரி வேலம் பிசிரோடாதி வித்தது அரையுந் தாளியும்.

53. உத்தம காளிச் சாத்தி முந்நாடன் அரைக்கே ஆறி
மத்தனுள் மணித்தக்காளிச் சாற்றினி லரைத்துப் பின்னி
பத்தியா யரைத்து உருண்டை பருவத்தில் அளவாய்ச் சேர்த்து
சித்திலை யரைத்து யங்கே செய்திடு முருண்டை யொன்று.

54. யித்த வுண்டை மேதி மோரில் குடிக்க நீர் மாமும் தாகமும் நிற்கும்

(வேறு)

<u>மேக தாபத்துக்கு குடி நீர்</u>:-

முருக்கம் பட்டை ஆவாரை வேர் மதியா நெல்லிக்காய் தான்றி
பருத்திக் கொட்டை கேத்தான் மணி பரிய சிறுவையுடன் சொன்றேும்

கரு வேலம். பட்டை கடலிருஞ்சி யொடு சுமந்தங் குன்னி நாலொன்றாய்
தருமே மூலையீர் நீர். குடிக்கத் தாகந் நீருஞ் சல மாறும்.

55. விக்கலுக்கு_மூல_மருந்தும்:-

1. மாறில்லாத் தாகத்தாலும் மலம் விடா மந்தத்தாலுஞ்
சோறன்னில் புரை சேர்ந்தாலும். உலவில்லா. நடையினாலும்
கூற முட்டினத்திலுங் குடுந்த நீர்ச் சொள்கையாலு.
மீறிய வகையாலஞ் விக்கல் வந்தெய்து மன்றே.

56. அன்ன விக்கலொன்று ஆனதோர் தமிளின் விக்கல்
2. மின்னிய ருத்திர விக்கல் விளங்கு கெம்பீர விக்கல்
மன்னிய மத்தி விக்கல் என்று தான் மானிடர்க் கெல்லா
மின்னிலந் தன்னில் விக்கலிசையவே விளம்புவீரே.

37. அன்ன_விக்கல்_குணம்:-

நெஞ்சு மலந்து நெருங்கியுட விளைக்க அஞ்சவே நாவு மருகிருக்க
மிஞ்சி வரு மின்னலை யீரிக் குணந்தான். மேவி யிருந்தா லெவர்க்கு.
மன்னசமா நெஞ்சு விக்கலாம்.

4. தமிள_விக்கல்_குணம்:-

இருக்கா லொருக்கா லெதிரெடுக்க. மெய்யு நெஞ்சுந்.
தருக்காய் நடுக்கித் தலை வலிக்கப்
பெருக்காக வேற்றப் போக்கு கெடுக்கு மெய்யாகு மிக் குணந்தான் சாக்கு தமிள்
விக்கல் தான்.

5. ருத்திர_விக்கல்_குணம்:-

தெளிவு தேக்கிட்டுத் திரும்பவே நெஞ்சு குளியவே யுப்புறைந்துக் கொள்ளு
மொளி சேருமக்கா மொக்குங் கண்ணங்கே யதகலை. நீ ருத்தி வமாய் விக்கலென்று
சொல்.

கெம்பிர_விக்கல்_குணம்:-

6. மெய்யிளைக்கு நெஞ்சி மிகச் சுளிக்க விக்க லெடுத்
தெய்ய முறக் கண்ணுறு மறச் சிவந்து
தொய்யு மிடையு. மருங் கலைய யேந்திளையே.
யாகத் தடையுங் கெம்பீர விக்கல் தான்.

7. மார்புங் குலையும் வலித்து வயறெருகி ஆரவுடன் மெய்யு மற நடுக்கிச்
சேர வரும் விருதலைய மூலை மின்னுர் செய் குணங்களாறு மத்தி விக்கலாம்.

8. விக்கலுக்கு_மருந்து:-

இந்துப்புடனே யிசைந்த நல்த் திப்பிலியுந்
தொந்தப் பட வரைத்துத் தூளாக்கிச்
சிந்தையுடன் தேன் விட்டிறக்கித் தின்னவே
விக்கல் நிலைதான் விட்டகன்று விடுந் தானே.

9. சீந்தி கொடுவேலியுடன் சேர்ந்த நிலவேம்பு சார்ந்திடவே. தண்ணீர் தனில் போட்டு
பேர்ந்திடவே காச்சி யிறக்கிக் கடுகவே தான் குடிக்கில் போக்கெனவே விக்கலுஞ்
சும் போம்.

10. சிங்கி கடமாஞ்சி சேர்ந்த திரிகடு கோடங்கஞ் சிறு தேக்கருடனே
வங்குள்ள பூசனி வித்தோக்க பொடி சரக்குரையில் உண்ணக் காசமுடன் விக்கல்
போம் தான்.

11. ஆமணக்கம் வேரும் அதில் கட்டையும் பொரி மாமணக்குங் கஸ்தூரி மஞ்சள் மிள
கேமணக்கும் மாதளை வித்தொக்க மருவி வெந்த நீர்க் குடிக்கில் தேகளையும் விக்
கல் போம் செப்பு.

12. மின்றுங் சொடிவேலி வேருடனே செண்பகப்பூ மின்றுஞ் சமருகப் பூ சுக்குடனே
மின்னலையீர் கையயிலிடு உப்புடனே கலந்து நீர் குடிக்கில் மெய்யி லெழும் விக்கல்
போம் விட்டு.

13. மிக்க கொடிவேலி வேருடனே மின்னலையீர் தக்க அரக்கதை முள்ளி தன் வேரோ
டொக்கவே சேவுகன் பூடனம் பாய் தினங் காய்ந்த நீர் குடிக்க
பாவகம்ராம் விக்கல் விடும்பார்.

ஆடாதோடை_பொன்_மெழுகு_டபம்:-

14. அருந்திய பசுவின் நெய்யும் அய மனோசிலையிரண்டு
பொருந்திய பீலிதோகை கட்டியே புகைகள் காட்ட
வருந்திய சுரமுங் காச்சல் விக்கலு மாறிப் போமே.

அகஸ்தியர் சூத்திரம் :-

1. காணப்பா ஏக மூலிகையிலே கட்டான கிருதங்கள் லேகியங்கள்
பூணப்பா தயிலங்கள் சூரணங்கள் பூட்டினேன் ரசாயனங்கள் கசாயக்கோடு
கோணப்பா வெகு சுருக்கு உலகத்தோர்க்குச் சோலையிலை யிது போலே சுருக்குமிலை
நாளப்பா பாய்ந்தது போல் செந்தூரங்கள் நாட்டிறேன் வெகு சுருக்கு நன்றாய்க் கேளே.

2. கேளப்பா முன்னூற்றில் செந்தூரங்கள் கெடியான சித்தருக்குஞ் சிவயோகிக்காம்
வாளப்பா உலகத்தில் வயித்தியோர்க்கு வரிசை பெறச் சொல்லி விட்டேனிரு நூற்றுள்ளே
நாளப்பா சாத்தியமாம் நோய்கள் தீரும் நாட்டினேன் முன்னூறில் சாத்தியந் தீரும்
வேளப்பா யின்னூலை யெடுத்துக் கொண்டு வேணபடி வயித்தியத்தை விரும்பிச் செய்யே.

3. செய்வதற்கு வெகு சுருக்கு சோலையிலை செகத்திலே பிழைப்பதற்கு எளிதா மின்னூல்.
கைவசத்தி வந்த முதல் சிலவுமிலை கனதை பெற்ற பெரியோர்க்கு மெளியோர்க்கு மாகு
மெய்யிலுள்ள வினைகளெல்லாம் நீங்கிப் போகும் வெகு சாத்திரவான்களெல்லா மயங்கிப் போவார்
நெய் மிகுந்த பால் போலச் செந்தூரங்கள் நிசமான பற்ப வகை நிகழ்த்துறேனே.

4. பற்பவகை செய்வதற்கு வகையைக் கேளு பாடினோம் பல நூலில் காரசாரம்
செப்ப வகை மூலிகையில் நீறித்தாலும் சேடத்துக்குமா தெளிவு கனல் கொள்ளாது
எப்போதுங் கொள்ளலாம் பயமத்தப்பா இன்னூலை எளிதாக ஈய வேண்டாம்
மட்ப வகை யும்முறைதான் தப்பாதப்பா நுணுக்கமாய்ச் செய்தொழிலை நுண்மை பாரே.

5. இரும்பு பற்பம் :-

நன்மையாம் அயத் தகடு நோக்கமாய்த் தட்டி நூதனமாய் சாணகலஞ் சாண் நீளம்
வன்மையாம் வெளிவேர் பலந் தானென்று வடிமொழுக்கு போலரைத்துப் பூசிப் போடு
கன்மையாம் ஓட்டில் வைத்து ஒரு மூடிச் சந்து வாய் சீலை செய்து கெசபுடத்தில்
வன்மை யலைத்திடவே பற்பமாகும் மாசற்ற திருநீறு போலா மென்னே.

6. என்னவே பிதை யெடுத்து வைத்துக் கொண்டு இரும்புச்சம் பாங்கதனை நாலாய்க் கீறிக்
துன்னவே பளம் பத்துச் சட்டி தனில் வைத்துச் சுருக்கியாய்க் கையான் சாற் நாளி விட்டு
பன்னவே காடியது நாளி விட்டுப் பருவமாய் வித்து வத்த யெடுத்துக் கொண்டு
தின்னவே புளைவிடை தாசீத் தொன்றில் தான் தீருமடா பாண்டு வகை சேரும் நோய்கள்.

7. சேரும் நோய் குறை நோவு வெட்டுங் கூலை தேனிலே கொண்டிடவே தீருந் தீரும்
பாரு நோய் தீர்வதற்குக் காந்தந் தன்னை பற்பமாய்ச் சொல்லுகிறேன் பரிந்து கேளு
ஆருமே செய்வதற்கு சிறியாள் நங்கை அரி விட்டு இடித்துச் சாறது தான் விட்டு
நீருமே வத்த வத்த அரை மூன்று நாள் நிசமாக வில்லை செய்து ரவியில் வையே

8. வைத்த வில்லை காய்ந்த பின்பு ஓட்டில் வைத்து மூடி வளமாகச் சந்து வாய் சீலை செய்து
கைத்த வில்லை கெசபுடத்தில் நீறிப் போகும் காந்தத்தின் பெருமைதனைக் காட்டொண்ணாது
சுத்தமுள்ள சிறுநீரொடு சோகை தீரச் சொல்லுறேன் மாங்களங்காய்ச் சாறு வார்த்துச்
சுத்தமுள்ள சத்ததனை யரைத்துக் கிண்டிச் சுகமுள்ள காந்த பற்பம் பணவிடையாய்க் கொள்ளே.

9. கொள்ளவே மண்டலத்தில் தீரும் பாண்டு கொத்தான சலக் களிச்சல் பிரமேகங்கள்
தள்ளலே நீர்ச் செரப்புக் கருபாணங்கள் சஞ்சீவிச் சூரணத்தில் சாந்தமாகும்
உள்ளபடி யுள் மேலுக் கிருமிக் கெல்லாம் லோக பற்பங் காந்த பற்பம் ரெண்டுஞ் சேர்த்து
வள்ளலே காந்தாதிச் சூரணத்தில் வைத்திடவே தீரும் நோய் மகிழ்ந்து கேளே.

தாம்பிர பற்பம் :-

10. கேளப்பா தாம்பிரத் தட்டொன்று வாங்கிக் கிரமையுள்ள நேர் கனமாய்த் தகட் டாய் தட்டி
வேளப்பா ஆடு தொடா மூலி வேரும் வெள்ளெருக்கு வேரிரண்டுஞ் சமனாய்ச் சேர்த்து
நாளப்பா யெருக்கலம் பால் தன்னாலாட்டி நலமான தகட்டின் மேலப்பிக் கொண்டு
மூளப்பா ஓட்டில் வைத்து ஒரு மூடிச் சுகமாகச் சந்து வாய் சீலை செய்யே.

11. சீலையது மண் செய்து கெசபுடத்தில் .சென்றிடவே நீறியது .செந்தூரந்தா
குலையமா யட்ட குன்மந் தீர் வேண்டி அட்ட சூரணத்துடனே தேனுங் கூட்டி
மாலையுடன் காலையிலே கொள்வீராகில் வாயுவென்ற வற்கு மெல்லா மாண்டு
போகுங்
குலையென்ற குல மெல்லாந் தீர வேண்டிச் சுருக்காக ரச பற்பஞ் சொல்லுறேனே.

12. சொல்லுறேன் ரசமதனைச் சுத்தி செய்து சுகமான கரந்தைச் சாறு விட்டு ஆட்டி
அல்லிறேன் மூன்று நாளரைத்த .பின்பு அடையோலே .யரைத்ததனை யுலரப் போடு
மல்லுறே ஓட்டில் வைத்துச் சீலை செய்து வைத்திடவே புடத்தில் மாண்டு போம்
நல்லுறேன் குகமது நீறிப் போகும் ரச பற்பம் பணவிடையில் குலை பதினெட்டு.

13. பதினெட்டுக்குட்ட மொடு கிரந்தி அரையாப்பு பறக்குமே பணவிடையாம் பனைவெல்
லத்தில்
லெதிரியிட்ட நோய்களெல்லா மோடிப் போகு மிரைந்து நாள்க் கொள்ள
யிருநேரந் தான்
சதிரிட்ட மேக வகை தீர வேண்டிச் சாத்துறேன் வங்க பற்பஞ் சார்ந்து கேளு
அதிலிட்ட வெள்ளீயங் கட்டி வாங்கி யப்பனே நெல்க் கனமா யடித்துக் கொள்ளே.

14. அடித்திட்ட தகடது தான் பலந்தானென்று ஆடு தொடா மூலி வேர் பலந்தானென்று
முடித்திட்ட வெந்தோன்றி கிழங்கு பலமொன்று சுகமாக அரைத்ததனை மேலே
அப்பி
வெடிக்கிட்ட ஒட்டில் வைத்து ஓடு மூடி வெண்மையாய்க் கெசபுடத்தில் வெளுத்து நீரும்
லடித்திட்ட மேக வகையிருபதும் வைத்திடுவாய் பணவிடை தான் மருவிக் கேளே.

15. மருவியதோர் வரை பஞ்சாங்கம் வாங்கி மைந்தனே தேன் விட்டு மத்தித்தே தான்
யிருபொழுது கொண்டிடவே நீர்ச் சுருப்பு இயல்பான கல்லடைப்புக் கிரிச்சனங்கள்
அருவியென்ற சதையடைப்புப் பிறமேகங்கள் அபான மறிந்து செய்தால் அகன்று
போகும்
கருவியென்ற காரீய பற்பஞ் சேர கருகரிய நொச்சி யிலை கவசமாக்கி.

<u>காரீய பற்பம்:-</u>

16. ஆக்கியதோர் வெள்ளிய பற்பம் போலே அளவாகப் புடம் போட ஆக்க நீறுஞ்
தக்கிடமாஞ் குலை யொடு வட்டந் தீருஞ் சினைப் புள்ள கிரந்தி பிர மேகந் தீரும்
தேக்கியதோர் சரீரத்தில் காந்தல் தீருஞ் செங்க நீர்க் கடுப்புடனே வரட்சை
தீரும்
பாக்கியமாந் தேகத்தில் உட்டிணங்கள் எல்லாம் பறக்குமடா காரீய பற்பத்தாலே.

17. பற்பமாய் வெங்கலத்தைச் சொல்லக் கேளு பசளையிலை தனை யரைத்துக் கபச
மாக்கி
அற்பமா யென்றுதே ஒட்டில் வைத்து அளவான கெசபுடந் தானறிப் பாரு
நொற்பமாய் நீறியது வெண்மையாகும் நறுக்குமடா பணவிடை தோன் நெய் தேன்
கூட்டி
உற்பனமாய்க் கொண்டிடவே குலை தீரும் முறைப்பான குற்மமும் வாயுந் தீரும்.

18. தீருமே சயரோக மிருமலுள் மாந்தை சிவசிவா யென்ன சொல்வேன் வெங்கலத்தி
னேர்மை
வருமேலிருக்கின்றேற் கின்றால் கிட்டில் யோகவான் வயித்தியத்துக் குருதியாகும்
பாருமே யிம்முறையைச் செய்து பார்த்தால் பற்பத்தினருமை யெல்லாங் காணலாகு
ஆருமே செய்வதற்கு அறிந்து சொன்னேன் அந்தந்த நால் பார்த்து அலைய வேண்
டாம்.

19.. <u>திரா பற்பம்:-</u>
அலைவில அலையாமலின்ன மொரு செய்தி கேளு ஆச்சரியந் திராவிடனை அதிகந்
தன்னை
இலையான இலைத் தும்பியிலையை புசி இட்டிடுவாய் கெசபுடத்தி லோட்டில் வைத்து
நிலையான திராத் தகடு நீறிப் போகும் நீர்ச் சுருப்பு வண்டுகடி சில் விஷங்கள்
குலையான குற்மங்கள் சயரோகங்கள் குட்டமொடு குலை பதினெட்டுந் தீரும்.

20. எட்டாத நிலவாகைச் சூரணத்தில் தேன் கூட்டி நாளொன்றுக் கிரு நேரந்தான்
முட்டாமல் பத்து நாள் கொள்வாயானால் மோசமில்லை நோய்களெல்லா முடிந்து
போகும்
கட்டான பித்தளையின் பற்பஞ் சேர காஞ்சிரையின் வேரரைத்துக் கனத்தில் பூசி
வட்டான ஓட்டில் வைத்து ஓடு மூடி வைத்திடவே கெசபுடத்தில் மாண்டு போமே.

21. மாண்டு போம் நோயதனைச் சொல்லக் கேளு வாயுவொடு குற்மம் முதல் கிராணி
மூலம்
பாண்டு வென்ற நீர்க் கனப்பு வாய் நீரோடல் பாயுகின்ற ஊடல் வாயு பாரிச
வாயு

ஆண்டதொரு அனந்த வாய்வு கெண்டை யறுபானம் நெய் தேனிலறிந்து கொள்ளு
பூண்ட தொரு வுடக்கரையைச் சொல்லக் கேளு புகழாக பலமொன்று புகழக் கேளே.

22. புங்குவேன் கல்ப்-பல கஸ்தூரிதனை யரைத்து அப்பி போட்டிடவே கெசபுடத்தில் பொருமி நீரும்
செல்லலங்கள் மெச்சுமடா யிந்த நீ தேசத்தில் வயித்தியற்குக் கிட்டுமோ
சொல்லகலாத பாண்டு வொடு வீக்கஞ் சோகை யப்பனே மகோதரம் நீராம்ப லோடு
இகலான நோய்களுக்கு அருபானங் கேளிட்டிடுவாய் யிஞ்சி தேனிரண்டிலே.

23. நாலான நாள் தனிலே வாங்கிப் பேர்டும் நரை திரையு மில்லையடா நமனும் வாரான்
சோலான சோலையில்லை பற்பஞ் செய்யத் தொழிலாளி யாருக்கூால் செய்து பாரு
பாலான கெருடக் கல் நீற்றக் கேளு பரிசு கெட்ட பண்டிதரே நற்றப் போருள்
நூலான நூல்களெல்லாம் பார்த்தா லென்ன நறுக்கமா யிந்த நூல் நோக் காணுமே.

24. நாய் போலத் திரிந்து தலைவான வைத்தியஞ் செய்ய நினைவு முள்ள வகையொன்று மறிய மாட்டான்
பேய் போன்ற வுலகத்தில் வயித்தியஞ் செய்யப் பெரு நூல்கு முதல் வருமோ பேயரே கேள்
வாயான ஆனைப் புல்க் கிழங்கரைத்து அப்பி வைத்திடவே கெசபுடத்தில் மாண்டு போகும்
நோயான உஷ்ணரோகங் களெல்லாம் நகரவே யிரு நேரம் வெண்ணையாமே.

25. வெண்ணையிலே தானருந்தக் கண்ரோகம் போம் மெய்யெல்லாங் குளிர்ச்சி தருந் தெளிவுண்டாகும்
எண்ணையிலே தானருந்தக் கடுப்புத் தீரும் மெயம்புருக்கி யுள் வறட்சை யேகு மேகும்
முன்னையிலே அஸ்தியுண்ட சுரமுந் தீரும் முள்ளுருக்கியுள் ரோக முணக்கல் தீரும்
பண்ணையிலே பால்க் கெருடன் பற்பத்தாலே புறக்கமடா வெட்டை யெல்லாம் பாரு பாரே.

<u>கல்நாரிப் பற்பம்:-</u>

26. பார்ப்பதற்குக் கல்நாரின் பற்பங் கேளு பகருகின்ற கொழுந்திலையும் பட்டை தன்னை
ஆற்கவே பிடித்ததனை ஓட்டில் வைத்து அதின் மேலே கல்நாரை நடுவே வைத்து
மேற்படியும் பட்டையிட்ட பொடியை வைத்து மேலோடு மூடியல்லோ சீலை செய்து
பூற்கமாய்க் கெசப் புடத்தில் நீறிப் போகும் முதண்டக் கல்நாரின் முறையைக் கேளு.

27. முறையான பற்பத்தைத் தேனில் கொள்ள முட்டோட்டே அலைந்த பல்லு மிறுகிப் போகும்
மறையாமல்ச் சிலேற்பனத்தை யறுத்துப் போடும் அகலாத உஷ்ணத்தை யடக்கிப் போடும்
பிறையான நாளொன்றுக் கிருபோதன்னப் பேரான சயமிருமல் சுவாச காசம்
நிறையான மந்தார காசமேகும் நேரான நாவலை லேகியத்தி லென்னே.

28. <u>நாக பற்பம்:-</u>
என்னவே நாக பற்பத்தி யல்பு கேளு எரிகாலிப் பாலிலரைக்கிடு கெந்தான்
பன்னவே அரைத்து வில்லை ரவி கண்டே தான் பரிவாக வோட்டில் வைத்துச் சீலை செய்து
முன்னமே சொன்னபடி புடத்தில் நீறி முதண்டப் பற்பத்தின் முக்கியங் கேளு
வன்மையாந் கிருணி யொடு மூலரோகம் வயறெரிவு நெஞ்செரிவு வாய்வுரோகம்.

29. வாயுவுடனிருக் கெல்லா மருபானங் கேள் வரிசையுடன் திரிகடுகு திரிபலாதி
ஆயுகின்ற திறிலகிரி கஞ்சா மஞ்சள் அத்தனையுஞ் சூரணித்துத் தேனிற் கிண்டி
நெயுடன் கொண்டுவிடு மண்டலந்தான் நேர்பாக முன் சொன்ன ரோகந் தீரும்
பாயுகின்ற வெள்ளியுட பற்பங் கேளு பருத்த கொரு ரூபாயை வாங்கிக் கொள்ளே.

<u>வெள்ளி பற்பம்:-</u>

30. வாங்கியே செம்முள்ளி யிலை யரைத்து மகத்தான கவசமாய்ச் செய்து கொண்டு
தேங்கியே கைக்குள்ளே வைத்து மூடிச் சில்லிட்டுச் சீலை செய்து முளப் புடத்தில்
பாங்கியே வைத்திடவே நீறிப் போச்சுப் படுபாவி வெள்ளியின் பற்பமாச்சு
ஏங்கியே சிமிருக்குள் பதனம் பண்ணு உறவு கெட்ட குற்மமொடு நீர்க் கட்டெல் லாம்.

31. நீர்ச் செருப்புச் சதையடைப்புக் கிறுகிறுப்பு நெஞ்சிலுள்ள கபமெல்லாம் அடங்கிப் போகும்
மூச்செறிய மூச்செல்லாம் அடங்கிப் போகும் மூக்கிலுள்ள நீர்ப் பாச்சல் பீனிசங்கள்
வாச்ச மண்டை குலையொடு புண் புரைகள் வாங்கிவிடும் வெள்ளியுட மருந்தான்
குட்சமிந்த பற்பத்துக் கருபானங் கேளு சுகமான அமுக்கிரா வேர்ச் சூரணந் தாருமே.

32. <u>தங்க பற்பம்:-</u>
ஆமிந்தத் தேனிலிடு மண்டலந்தான் அகலாத ரோய்களெல்லா மகன்று போகும்

ஓயிந்தத் தங்க பற்பஞ் சொல்லக் கேளு யுரதியுள்ள தங்கக் காசதனை வாங்கி
காயிந்தப் பனி தாங்கி மூலி தன்னைச் சாந்து. போலரைத் தப்பி. ஒட்டில் வைத்து
வாயிந்தச் சந்து வாய்சீலை செய்து வைத்திடுவாய் கெசபுடத்தில் பற்பமாச்சே.

33. ஆச்சிந்தப் பற்பத்தை வைத்துக் கொண்டு அளவிறந்த வித்தை தனை ஆடு ஆடு
பாச்சிந்த வகையறிந்து வேதை. தன்னை பரச்சிறுலே மூரைக்குப் பாயும் பாயும்
வாச்சிந்தச் சொற்ன பற்பம் வியாதி யெல்லாம் திறமும் வளமாக வருபான மறிந்து போடு
காச்சிந்த அநுபானஞ் சொல்லக் கேளு கண்டாத்திரி லேகியத்தில் கொண்டால் கேளே

34. கொண்டாக்கால் சிலேற்பனந்தான் தொண்ணூற்றாறும் ஓடி போமென்று சொல்லி
கட்டோட்டே போங் கண்டாக்கால் சயரோகங் கப மீளையுள் மாந்தை கட்டே போ
முண்டாக்கால் திரிகடுகு லேகியத்தி மறவு கெட்ட குற்ப மொடு மகோதரங்கள்
சென்றுக்கால் வாயுவொடு நீராம்பல் மூலஞ் சிரநோவு கண்ணோவு தீரும் பாரே.

35. தீருமே வெட்டமொடு குறை நோவெல்லாம் சீனப். பாலே தியந்தில் தின்றால் கேளு
பாருமே சூலையொடு கிரந்தி வெட்டம் பறக்குமே தேனிலிடு பத்து நாளில்
சேருமே பிறமேகம் நீரளிவு தீரும் சீந்திச் சூரணத்தில் கொண்டு.
வாருமே நெல்லிக்காய் லேகியத்தில் வைத்து மெள்ளக் கொண்டிடவே பித்தம் போமே

36. போகுமே சிவன் வேம்புச் சூரணத்தில் பூட்டிடவே புள் புரைகள் சில், விரணங்கள்
ஆகுமே வண்டு கடி. விரணமென்றதெல்லாம் ஆச்சரியம் வேம்பின் சூரணத்தில் கொள்ள
ஏகுமே வாதமென்ற தெண்பத்தி நாலெடுத் தெடுத்த நோய்களெல்லா. மேங்கிப் போகும்
வாகுமே அநுபான மறிந்து செய்தால் வருகின்ற நோய் தீரும் சொர்ணம் போலாம்.

37. சொர்ணமது தின்றுக் கால் சொர்ணமாகும் சுகமான இரும்பு தின்று இரும்பு போலாம்
அன்னமது தின்றுக் காலழிந்து போகும் ஆசையது. விருந்தாக் கால் பிறவி தீரா
வன்னமது பிறந்தாக்கால் வறுமை பாழாம். மாநிலத்தி லிரந் தாக்கால் தவசு பாழா
பொன்னதனை மறந்தாக்கால் லெந்தப் பேர்க்கும் போசாது அது வறிந்து பொன்னை நீற்றே.

38. <u>கெந்தக பற்பம்</u>:-

நீற்றுவதுக் கின்னமொரு செய்தி கேளு நேரான கெந்தகத்தின் பற்பஞ் சொல்வேன்
ஏற்றுகின்ற சிறு சின்னிதனை யரைத்து எலுமிச்சங் காயளவு குகை போல் பண்ணி
தொத்துகின்ற குகையதனைக் காயப் போட்டு சுகமாகக் காய்ந்த பின்பு சொல்லக் கேளு
சாற்றுகின்ற கெந்தகத்தின் கட்டி வாங்கித் தளமான குகைக்குள் வைத்துச் சில்லுப் போடே.

39. சில்லிட்டுச் சீலை செய்து புடந்தான் ஆறி யெடுத்துப் பார். செய பற்பந்தான்
மல்லிட்டு வாதாடி வந்த நோய்கள் மயங்கியே யோடுதற்கு அநுபானங் கேள்
நெல்லிட்டு நெல்லிடை தான் தேனில் கொள்ள நிலையான வெட்டமொடு குறை நோவெல்லாம்
பல்லிட்டுக் கடித்ததொரு சில் விரணங்கள் பாரித்த வாயுவொடு வாத ரோகம்.

40. வாதத்திலெழுந்த கிரந்தி சூலை வயற்று வலி நீர்ப் பெருக்கு மகோதரங்கள்
சூதத்தால் வந்ததொரு கெற்ப ரோகம் சுளத்தி வெட்டும் அரத்தி விரும்புத்தாப் போலே.

41. <u>மண்டூர பற்பம்</u>:-

அத்ததொரு மண்டூர நீறு சொல்வேன் அதிகமாஞ் சிறு சுணங்கு அரைத்துப் பூசி
வைத்திடவே மண் குகையில் சில்லுப் போட்டு வளமாக்ச் சீலையொன்று வாயில் செய்
பத்தியுடன் கெசபுடத்தில் சுகை நீறின் பரிசான வாறது போல் நீறிப் போகும்
புத்தியுடனிதை யெடுத்து வைத்துக் கொண்டு புனிதமாய்த் தேனிலே புசித்திடாயே.

42. பொசித்திடவே பண்விடைதான் தேனிற் கொள்ளு போக்கத்த பாண்டுவகை பொல்லா வீக்கம்
நசித்திடவே பண்ணி விக்கு மண்டூரந்தான் நல்லோக்கம் பேரல்லல் வீரியந்தான் மெத்த
புசித்திட்ட விரணபாகம் விரண நீரெல்லா மூட்டோடே பிடுங்கி. விடு மூர்க்க. மெத்த
உசித்திட்ட அஞ்சனக் கல் சொல்லுவேன் கேள் உரபுயிளஞ் சிறுகீரை குகைபோல் பண்

43. பண்ணியே மேல் மூடியொன்று செய்து பாங்கான அஞ்சனக் கல் நிறைய யிட்டு
ஒண்ணிய மண்சீலை செய்து கெசபுடத்தி லுரதியுள்ள சங்கு போல் நீறிப் போகுந்
தண்ணியிலே போட்டவுடன் மிதக்கும் பாரு சலமான மேகவகை யிருபத்து
மெண்ணியே தேனிலிடு வாயாறு லென்ன சொல்வேனர் போன போக்கைத் தானே.

<u>அஞ்சனக் கல் பற்பம்</u>:-

44. போக்கான தாளகத்தினீறு சொல்வேன் புதிய தலையோட்டதனைப் பொடித்துக் கொ
நீக்கான சுண்ணாம்புத் தண்ணீர் விட்டு நிலையாக அரைத்ததனைக் கைபோல் பண்ணி

வாக்கான மேல் மூடி யென்று செய்து வன்மாகச் சாயவைத்து அதன்மேற் கேளு.
பாக்கான நாளகத்தின் கட்டி வைத்துப் பரிவாகச் சீலை செய்து உலர வைத்து.

45. உலர்ந்த பின்பு குக்குடத்தில் நீறிப் போகு முக்கமமே நாளகத்துக் கொப்பு
முண்டோ
மலர்ந்ததொரு மல்லிகைப் பூப் போலாம் வெள்ளை மாசற்ற வெள்ளைதனைப்
வைத்துக் கொண்டு
அலர்ந்த மலர்த் தேனதிலே கொள் வீராகிலரிதான சயரோக மந்தார காசங்
கலந்த கபம் ஈளை யிளைப்பிருமலுள் மாந்தை கை கடந்து ஓடிப் போங்
கண்டு கொள்ளே.

46. கண்டு கொள்ளு மநுபான மறிந்து செய்தால்க் கரப்பான் கடியென்ற மறை நோய்
குட்டம்
வண்டு கடி எலி விஷங்களெல்லாந் தீரு மைந்தனே அநுபான மறிந்து போடு
பண்டுடைய சாதிலிங்கந் தன்னைக் கேளு பற்பமாய் நீறுகின்ற வளமைபாரு
தெண்டிசையிலுள்ள வரால் நீற்றப் போமோ செகமெல்லா மெய்க்க நீற் செய்யி
றேனே.

47. <u>லிங்க பற்பம்</u> :-
செய்யதொரு சாதிலிங்கம் கட்டி வாங்கிச் சிலாமி வேர்ப் பட்டை யரைத்துக்
வெய்யதொரு குகைதனிலே வைத்து மூடி விதமாகச் சந்துவாய். சீலை செய்து
பைய்யவே குக்குடத்தில் நீறிப் போகும் பரிவாக நிறத்தைப் பாரிடை போகாது
உய்யவே நோயெல்லாந் தீர வேண்டி யுறைப்பான அநுபான மொன்று கேளே.

48. ஒன்றுதான் தேனிற் கொள்ள உறுதியாங் குன்ம வாயு மன்றுள்ள சன்னி வாதம்
பாரிச வாய்வு சூலம்.
வென்றிடு பிருமல் ஈளை யிளைப்புடன் விரைந்து போகும்
நன்று சுரமுந் தீருங் கபங்களும் நாடாதோடும்
உன்றிடு அநுபானங்கள் கண்டு கண்டுகந்திடாயே.

<u>வீரபற்பம்</u> :-

49. உகந்திட வீர பற்ப முறைக்கிறே னாதியாகச் செகந்தனில் அப்பை மூலக் கிழங்கினைக்
குகையதாக்கி
இசைந்தனில் வீரம் வைத்து இசைந்திடு மூகைக்குள் வைத்துப்
பகர்ந்திடு சில்லுப் போட்டுச் சீலையும் பரிவாய்ச் செய்யே.

50. செய்து குக்கிடமே போடத் தீர்க்கமாய் நீறிப் போகு
மெய்தனித் தேனிற் கொள்ள விடு பணவிடையதாக
அய்யமே சூலை குன்மம் வாயுவு மகன்று போகும்.
மெய்யிது சொன்னேன் காரப் போக்கினை விரைந்து கேளே.

51. விரைந்திடு பொரிகாரத்தைக் கட்டியாய் விரைந்து வாங்கி
உரைந்திடு சங்கை நற்றி யரைத்ததைக் குகை யுண்டாக்கி
நிரைந்து சில்லதனுல் செய்து நிறை பொரி காரம் வைத்து
வரைந்திடு சீலை செய்து குக்கிடம் வைத்திடாயே,

52. வைத்திடக் காரம் நீறும் வளமிதுக் கநுபானங் கேள்
நெய்த்திடத் தேனில் கொண்டால் நீர்க் கடுப்புடனே மாறும்
இத்தனை விட்டுப் பாயு மிசைந்த கல்லடைப்புத் தீருந்
உய்த்திடுஞ் சதையடைப்புக் கரந்து நீர்த் தோஷமும் போம்.

53. <u>பொரிகார பற்பம்</u> :-
போமென்று சகத்திற் பேதி புகலுறே விசமதாக
ஆமென முலைப்பால் விட்டு அதனுட னெருக்கம் பாலால்
வாமெனச் சர்மம் நாலு மகிழ்ந்தரைத் தன்டை செய்து
தாமெனவே வோட்டில் வைத்துச் சந்து வாய் சீலை செய்து
நாமெனக் குக்குடத்தில் நாட்டினில் நல்ல நீறே.

<u>சகத்திர பேதி</u> :-

54. நல்லதோர் நீறுதன்னை நாட்டிடு இஞ்சி சாற்றில்
வல்லதோர் சுரமுந் தீரு மருவிய பாலிற் கொள்ள
மூல்லை யின்ன கையினிலே மூலங்கிய சுரமுந் தீரும்
வெல்லதோர் உஷ்டணங்கள் விரைந்திடும் வெண்ணை தானே.

55. வெண்ணை குந்திருக்க நீறு விளம்புறேன் விரைந்து கேளு
பன்னியின் பாலை விட்டுப் பரிந்தரைத் தன்டை செய்து
அன்னமேல் ஓட்டில் வைத்து அதனின் மேலோடு மூடி
மன்னவே சீலை செய்து வைத்திடு குக்குடத்தில்..

56. முக்கூடந் தன்னில் நீயுங் கூகை நீருப்பதாகும்
அக்கூட நீறு தன்னை வெண்ணெயி லருந்துவீராய்ப்
பக்குடக் கடுப்பு ரத்தம். பாசியும். பறந்து போகும்
மிக்குள்ள புண்ணுந் தீரு மெண்ணெயில். விரைந்து போடே.

57. போடு பல்லு ளைவுக் கெல்லாம் புண்ணைப் பட்ட தெல்லாஞ்
சூடது கொண்ட புண்ணுஞ் சூலையின் புண்ணுந் தீரும் . .
ஆடிடும் பற்களெல்லாம் ஆணி போலுறைத்துப் போகுந்
கேடும் வெண் குந்திருக்கஞ் செய்திடுந் திறங்கள் தானே.

58. திறந்திடு பவள. பற்பஞ் செப்புறேன் திறமதாகச் சி
சிறந்திடு முசலி ரத்தந் தீர்க்கமாய் விட்டு ஆட்டிக்.
குறைந்திடா வில்லை செய்து குலாவிய ஒட்டில் வைத்து
மறைந்திட ஓடு மூடி வைத்திடு முக்கூடந்தான்.

59. தானது நீறு வெள்ளை சதுர் முகன் போலவாகும்
ஆனதோர் நீறு தன்னைப் பணவிடைக் கநுபானங் கேள்
ஏனமான மாதுளை நீர் தேனுடனினிது கொள்ள
மானமா குழலினாளே சயங் கப்மக்னு போமே.

<u>பவள பற்பம் :-</u>

60. அகன்றிடு மிருமல் காசமதிகமாம் பவள பற்பம்.
புகன்றிடப் போகாதப்பா புனிதம். மிந்த. நீறு செகந்தனிச்
செய்யமாட்டடார் செப்பினேன். செகத்தோர்க்காக
நிகன்றது போலா பின்னே. குருமாய் நிகழ்த்தினேனே..

61. நிகழ்த்தினே னென்ற தென்ன குருமாய் நீற்றின் போக்குச்
செகத்தினி லாருங் காணார் செப்பினேன் குருமாக
அகத்தினிலிருந்து கொண்டு ஆடலாங் கோடி வித்தை
மகத்த தாயிந்த நூல் போல் வயித்தியங் கண்டிலேனே.

<u>வயிர பற்பம் :-</u>

62. கண்டதோர் வயிரந் தன்னைக் கதிமையா. யுரைக்கக் கேளு
பெண்டுகள் சுரோணிதத்தைப் பேணி விட்டரைத்து வில்லை .
நன்றதாய்ச் செய்துலர்த்தி நாடிய ஒட்டில். வைத்து. மூடிச்
சென்றிடக் கெசபுடத்தில் தீர்க்கமாய் நீறிப் .போகும். .

63. நீறிய நீறு தன்னை நிச்சயந் தேனிற் .கொள்ள .
ஊறிடத் தேகமெல்லா முத்த தோர் வயிரம் போலாம்
மாறிடு மேகமெல்லாம் வச்சிர காயமாகும்
கூறிடும் ரெத்தின மெல்லாங் கட்டியாய்க் கூறக் கேளே.

64. கோளது பவளம் போன்ற உமரியை யரைத்துக் .கொண்டு
ஆளது குகைபோல் பண்ணி யதனுள்ளே ரெத்தினம் வைத்து
மூளது சில்லுப் போட்டுச் சுத்தியே சீலை மண்ணும்
நாளது முக்கூடத்தில் நன்றதாய் நீறிப் .போகும். .

65. போமது நீறித் தாமல் புவியினில் காட்டொண்ணா
ஆமது ரெத்தி நீறு அதிகமாம் சித்தர் .செய்வார்
நாமது வெளியாய்ச் சொன்னோம் நாட்டினில் மூடர்க்காக
ஓமது அநுபானங்கள நிற்திட வுறுதியாமே. .

66. உறுதியா மிந்த நீற்றி அறுதியாம் பாசாணத்தி னீற்றினை யறியக் கேண்மோ
சுருதியா யண்டத் தோட்டைச் .சுண்ணமா யுதிக் கொண்டு
பெறுதிய குகை போல் பண்ணிச் சட்டியாய்ப் .பேணி வையே.

67. பேணியே வைத்த பின்பு வெள்ளெருக்கதனைப் பேசி
லாணிய பாலை விட்டு அதனின் மேல்ச் சசில்லுப் .போட்டுப்
பூணிய சீலை செய்து முக்கூட புடமதாக
வாணியே வைத்த போது வசிவற்ற .பற்ப மென்னே.

68. பற்பத்தினிடையே ரசம் பாச்சியே முலைப்பால் விட்டு
நற்புடரைத்து வில்லை நயமற வுலர வைத்து
உற்பன மோட்டில் வைத்து மூடிட்டுச் சீலை செய்து
கற்பகக் களிற்றைப் போற்றிக் முக்கூடங் கருதிக் கொள்ளே.

69. கொள்வது நீறதான குருவினை வெள்ளியத்தில்

அள்வது பலத்துக் கோர் பணவிடை யளவதாக
உள்வது உருகும் போது கொடுத்திட உறஞ்சிக் கொள்ளு
மெள்வது மய்யான ரூபாய் விலையது அதிகந்தானே..

70. தானெனச் சரக்குக் கெல்லாம் பாலினில் தாக்கிடுக் கால்
வனென நாளிகைக் குள்ள சரமோடிப் போகும்
நானென யிந்த நீ நாட்டினி லைக் கொண்டது
பானென யிந் நூலைப் பத்திப் படுத்தி வைய்யே.

71. நலச்சார பற்பம்:-

வைத்திடு சாரமான நீற்றிலே மகிழ்ந்து கேளு
எய்த்திடு புளியஞ் சாம்பல் எடுத்ததை யுப்பாய்க் காய்ச்சி
நய்த்திடுங் குப்பை மேனிச் சாற்றை விட்டரைத்து நன்றாய்
அய்த்திடக் குகை பிடித்து அதனுள்ளே வைத்து மூடே.

72. மூடியு மகலுச் செய்து முசியவே சீலை செய்து
ஆடியே கோளியாகப் புடத்தினிலதிக நீறு
வாடிய வாதிகாளே சாரத்தை நீற்றுவாயே.

73. வாயது பேசிடக் கால் வாய்க்குமோ சார நீறு
நோயது கொண்டவாதி சாரத்திறுஞ்க்கங் கேளு
காயது நாகந் தாமுங் கண் திறந்தோடிப் போகும்
பேயது கொண்ட போதே பேசாதே பேணிப் பாரே.

74. பாருள நோய்கள் தீரப் பாச்சிடு தேனிலே தான்
சீருள மகோதரங்கள் வாயுவுந் திரட்சி தானும்
நீருள நீராம்பல் வீக்கம் நிச்சயங் கெற்பரோகம்
ஊருள குற்ம மெல்லா மோடிடு முலகத்தோர்க்கே.

உப்பு பற்பம்:-

75. உலகத்திலுப்பின் பற்ப முரைக்கிறே னுறுதியாகச் சீலை
பெற்ற வுப்பை வாங்கிச் சிறந்தொரு கட்டியாக
மலை பெற்ற வன்னிப் பட்டை யிடித்ததை மாவதாக்கி
நிலை பெற்ற ஒட்டில் வைத்து நிலைத்த தோருப்பை வைய்யே.

76. வைத்ததோர் கட்டிமேலே வன்னியின் பட்டைத் தூளை
உற்றதோர் கீழ் மேலிட்டு ஒட்டுமேலோடு மூடி
முத்திரை சீலை செய்து புடமிடங் கோழியாக்கி
அத்த பின்னெடுத்துப் பார்த்தால் அதிகமாம் பற்பமாமே.

77. அதிகமாம் பற்பந் தன்னை யருந்திடத் திசவாய் வெல்லாம்
பதியை விட்டோடிப் போகும் பாரிச வாயுச் சூலங்
கதி கெட்ட மகோதரங்கள் கலைத்திடு நீர்த் தோஷங்கள்
கெதி கெட்டு ஓடிப் போகுங் கேள்ப்பதற் கின்ன முண்டே.

78. உண்டென வுரைத்த செய்தி உறுதியாய்ச் சொல்லக் கேளு
அண்டர்கள் போற்று மிந்த அதிகமாம் உப்பு நீறு
தெண்டிசை புகழும் வாழச் செப்புறேன் பற்பந் தன்னை
உண்டிட வெள்ளி செம்பில்க் களஞ்சுக்கு ஒரு மாவீயே.

79. ஈய்ந்திட வயதஞ்சாகு மெடுத்திடு மானிக் கெல்லாந்
தேய்ந்திட வைத்தாயாகில் தெளிந்திடுந் தங்கமாகும்
சாய்ந்திடுங் கசட மக்கு மிந்த நூல் காட்டலாகா
ஆய்ந்திடும் பெரியோர்க் கீய்ந்து தாலறம் வரு மதிகமாமே.

80. ஆமையோடதனை நீற்று மருள் தலைச் சொல்லக் கேளு
பூமி வேர் தனை யரைத்துக் கவசமாய்ப் பொதிந்து கொண்டு
வாண்மையாய்க் கைக்குள் வைத்து வாயிலிச் சில்லு போட்டு
தாண்மை குக்குடமதாக வைத்திடு தவள நீறே,

81. தவளமாய் நீறித்தாகில் சக்கரப் பாணி நீற்றைக் கவளமாய்த் தேனிலிட்டால்
கண்ணில் நோய் தொண்ணூறு தீராதும்
உவளமாய் ஓடிப் போகும் ரோகந் தீரும்
பவளமா மிந்த நீ பார்நினில் தி அதிகந் தானே.

முத்து பற்பம்: ஆமையோடு பற்பம்:-

82. தானென முத்த நீற்றைச் சாத்துறேன் தரணியோர்க்கு
மானென அண்ட நீரால் மகிழ்ந் தரைத்தண்டை செய்து
நானென ஓட்டில் வைத்து நாடியே சீலை செய்து
வானென புடந்தான் வைத்திடில் சுண்ணமாமே.

83. சுண்ணமா முத்த நீற்றை வெற்றிலை தன்னிற் பூசி
அண்ணமே தாம்பூலந் தானருந்திடில் லகிகமாகு
முன்னமே பல்லிறுகுஞ் சிலேற்பன முழுதுந் தீரும்
வண்ணமாஞ் சரீரத்துக்கு வாய்த்த நற் சுண்ணந்தானே!

84. வாய்த்திடும் பிரமேகங்கள் வந்த நீரளிவுந் தீரும்
காய்ந்திடுங் கற்பூரத்தைச் சாத்துறேன் சுண்ணமாகக்
காய்ந்த கற்பூர வள்ளிச் சாற்றினில் கலந்தரைத்துத்
தோய்ந்திடும் வட்டதாக ரவியினில் காயச் சொல்லே.

85. சொல்லிய வட்டை ஓட்டில் தங்க வைத்தோடு மூடி
நல்லதோர் சீலையது நவின்றிடு கோளியாமம்
மெல்லியே எடுத்துப் பார்த்தால் வியனுள்ள சுண்ணமாகும்
வல்லி வெற்றிலையில் தின்றால் வச்சிர காயமாமே.

86. காயமே பலத்துப் போகும் கசடது அத்துப் போகும்
வாயினில் ரோகந் தீரும் வருந்திய கபமும் போக்கும்
மாயமாம் வாயுவு போக்கும் மல சலங் கட்டுந் தீரும்
நேயமாங் கண் நலங்கும் நிச்சயமிது சொன்னோமே.

87. நிச்சயமாகச் சொல்வோம் நீலமாந் துரிசுப் போக்கு
வச்சதோர் வங்கத்தோடு இடைக்கிடை யிரசம் வார்த்து
மெச்சு மிந்திடைக்கு நல்ல வெடியுப்புங் கூடக் கூட்டி
உச்செயம் வாய் நீராலே யுற வரைத் தலத்தி வட்டாய்.

88. வட்டமாம் ஓட்டில் வைத்து வளையவே சீலை செய்து
திட்டமாய்க் குக்குடத்தில் சென்றிடச் சுண்ணமாகு
முட்டவே சிவந்து தானுல் முறைப்படி உப்புக் கூட்டி
அட்டமா யரைத்து முன் போலப் புடத்தி லதிக சுண்ணம்.

89. சுண்ணத்தை வாய் நீராலே சுளத்தியே அரைத்துக் கொண்டு
அன்னத்தைத் துருசுக் கட்டிக் கப்பியே ரவியில்ப் போடு
முன்னெத்த மூன்று நாளில் முழு வெள்ளையாகும் அப்பா
பொன்னெத்த சீலை செய்து போட்டிடு கடை யொன்றே.

90. என்றிந்த யெடுத்துப் பாரு இயல்புள்ள சுண்ணமாகுங்
கன்றிதைக் கண்ட பேர்க்குக் கலியெல்லாம் நீங்கிப் போகும்
பன்றிதை ரசத்துக் கால்ப் பணவிடையாகத் தாக்க
மன்றிதைக் கொன்று போடும் வாயினியமி நீராலே.

91. வாயினியமி நீராலே மத்தித்து உருட்டிக் கொண்டு
காயினியமி போட்டுள்ளே கரியினி லுருக்கிக் கொண்டு
தாயினிமாயி பாதந் தன்னையே வணங்கி நித்தம் ஆ
ஆயினி லிதனைக் கொண்டு ஆடலாங் கவர்கள் கோடி.

92. கோடி யென்றுரைத் தேன் கோடா கோடியு மிருக் குள்ளாகும்
வாடியே துரிசுச் சுண்ணம் வைத்திடு மயங்க வேண்டாம்
தேடியுங் கிடையாதப்பா தெருல்லென் கிடக்குமோ சொல்
பாடியும் படித்து மென்ன பாரினில் நூல் கிட்டாதே.

93. கிட்டாதே போனதேதோ கிடைத்தவர் கொடுக்க மாட்டார்
கட்டாகத் தந்த பேர்கள் காலினில் விழுந்து போற்றிச்
செட்டாக யிருக்கலாகா திரவியஞ் செய்வதென்ன
முட்டாளாய்ப் போகாமல் தான் மனது கூர் முறையாய் வாங்கே.

94. வாங்கு பொன்னி மிளைப் பற்பம் வன்மையாய்ச் சொல்லக் கேளு
ஓங்கிய அரசின் பட்டை நாளதா யிடித்துக் கொண்டு
காங்கிதைக் கீழ் மேலிட்டுச் கூட்டியை நடுவே வைத்து
ஓங்கிய ஓடு வைத்து ஓடு மேலோடு மூடே.

95. மூடியே சீலை செய்து முக்கியங் கெசபுடத்தில்
சாடியே நீறிப் போகுந் தவளம் போல் வெண்மையாகுங்
கூடிய வாயு ரோகங் குலை குலைந் தோடிப் போகும்
நீடிய குன்ம மெட்டும் நிலை விட்டு ஓடுங் காணே.

96. காணவே குலைக் கட்டுக் கண்ட விற்புருதி மாலை
ஊரையாப்புப் புத்தூ ஓடிடுந் தேனிற் கொள்ளத்
தோணவே தங்க நூல் சுருக்கா மொன்று சொல்வேன்
நாணவே ஞரி வித்தை நாவினியமி நீராதேலை.

97. நீரிலலரைத்துத் தங்கக் காசு மேல்ப் பொதிந்து ஒட்டில்
தாரின் மேலோடு மூடிச் சந்து வாய் சீலை செய்து
பதிவில் கெசபுடத்தில் உச்சியே நீறிப் போகும்
பேரிலுல் தங்க் நீறும் சொன்ன திந்தப் போக்கே.

98. போக்கென்ற வகையே 'சொல்லக் கேளு புத்தி கெட்ட மிலேச்சருக்கும்
பொருளோ காணும்
ஆக்கென்ற தங்க பிற்பம் வீரங் கட்டி யப்பனே ரவி மதியி லீந்தாயாமல்
ஊக்கென்ற விராகனுக்கு அதிகங் காணு முறுதியுள்ள தங்கமடா யிந்தப் போக்கு
நாக்கென்ற சரசோதி திரக் செய்வாள் நாதாக்கள் செய்கின்ற வித்தை தானே.

99. வித்தை யென்ற வித்தை யெல்லாம் நாத்துச்சுள்ளே விருத்திட்டு வெட்டுதறகுச்
சுருக்கு மெத்த
சுத்தென்ற சுத்தெல்லாம் விட்டுப் போட்டுச் சுருக்கான வித்தைகளை யாடித் தேற
பத்தென்ற ஞ மிரு முகிந்தவாறு பாடுறே னின்னமொரு நூறு பாரு
முத்தென்ற முத்துப் போல் மூலிகையின் போக்கு முக்கியமாய்ச் சொல்லுகிறேன்
முறையைப் பாரே.

100. முறையென்ன யேக மூலிகையின் போக்கு முக்கியமா யென்னையொடு நெய்
கசாயந்
முறையென்ற முறை யெல்லா மிதற்குள் சொன்னேன் சுருக்காகுந் தயிலங்கள் நெய்
கசாயம்
புறையென்ற பறை போட்டேன் வீதிக்குள்ளே பண்பு போல் பாடி விட்டேன்
பல நூ லெல்லாம்
நிறையென்ற முறை யெல்லாஞ் சுருக்கிச் சொன்னேன் நிசிசய மிருநூற்றுக்கும் நிகர்
காணேனே.

101. <u>மேகத்துக்கு சந்தனாதித் தயிலம்:-</u>
நிகரில்லா மேகத்தின் தயிலங் கேளு நிலையான சந்தனமு மிராமிச்சோடு
வகையான ஆவரையின் பட்டையோடு வகை பத்துப் பலமாக வாங்கியே தான்
பிசகாமல்த் தண்ணீர் விட்டெட்டொன்றுக்கிப் பெருமை யுற்ற கசாயத்தை
வாங்கியே தான்
நகையாமல் எள்ளெண்ணை நாழி விட்டு நறு நண்டி வேர் பலந் தானரைத்துப்
போட்டே.

102. போட்டதனைக் காச்சியே மெழுகதாகல் புகட்டியே வடித்திடுவாய் பூசக் கேளு
நாட்டதனை முழுகி வர மேகந் தீரும் நலமான தேகமது இருக்கும் பாரு
பூட்டதனை மேகநீர் போக வேண்டிப் புனிதமாய் மருந்தொன்று புகலக் கேளு
சாட்டதனை முன் சொன்ன பற்பத் தொன்றைச் சார்ந்து கொடுத்து விடு சாந்த
மாமே.

103. வில்வாதித் தயிலங் கேளு தானு வில்வ வேர் பலந்தான் பத்து
பாந்தமா யிடித்ததனைப் பதக்கு நீரில்ப் பதமாய்க் காச்சியே யெட்டொன்
றுக்கிப்
போந்த என்ணை நாளி விட்டு சந்தன மோர் பலந்தான் புகழாகக் கசாயத்
திலரைத்துப் போட்டு
வாய்ந்த மெழுகாய்க்கால் வடித்துக் கொண்டு வாகாக முழுகி வரும் வரிசை கேளே.

104. வளமையுடன் முழுகி வரப் பித்தம் போகும் வரிசை பெற மெய்யிலுள்ள உட்டி
ணங்கள் போக்கும்
இளமை பெற ஆக்கி விக்குமேகம் போக்கு மிரு கண்ணுந் தெளிவு தரு மிருமல்
தீரு
வளமதனில் ரெத்த பித்த மோடிப் போகும் உள் வரட்சையுள்ச் சுரங்க
ளொழிந்து போகுந்
தளமீகச் சூட்ச்சமாய்த் தயிலஞ் சொன்னேன் சம்பிரதாய மிது பார்
தறனியோர்க்கே.

105. <u>வேங்கைத் தயிலம்:-</u>
தறணியுள்ள மானிடர்கள் பிழைக்க வேண்டிச் சாற்றுறேன் வேங்கையுட தயிலந்
தனைக்
கறணியமாம் வேங்கை பலம் பத்து வாங்கிக் காச்சி விடு தண்ணீரெட்டொன்
றுக்கே
தறணியுள்ள கசாயமதை வடித்து வாங்கித் திறமான இராமிச்சுப் பலமொன்றுக
அரணியமாய்க் கசாயத்திலரைத்துப் போடு அளகான மெழுகு பதமான வாறே.

22.4.64.

106. வாருகா முழுகி வர ஆண்மை சேரு வாதமொடு சூலைகளு மாண்டு போகும்
பெருகப் பித்தமது பிறண்டு போகும் பீனிசமு மண்டை யிடி பிறட்டில்
வீறுன வீக்க முதல் வாங்கிப் போகும் மெய்யெல்லாங் காந்தி யுண்டாம்
விழிரோகம் போம் நரம்பும் பின் சொன்ன தயிலப் போக்கு நறுக்கமாம்
பற்பத்தின் போக்கு நரே.

107. போக்கான செய்தி யொன்று சொல்லக் கேளு புகழான வெட்டி வேர் பலம் பத்தாகும்
நோக்காகப் பதக்கு நீரெட்டொன்றுக்கி நறுக்கமாய் வடித்ததனி லெண்ணெ நாழி
வாக்கான அதிமதுரம் பலந் தானென்று மைந்தனே கசாயத்தில் மை போலாட்டி
தாக்காக வெண்ணெய்க் கரைத்துக் கொண்டு சாதகமாய் மெழுகு பதந் தன்னில் வாங்கே.

108. வாங்கியே முழுகி வர வரிசை கேளு மானிலத்தில் பீனிசங்கள் மண்டை சூலை
ஒங்கியே மூட்டமொடு பிரநீர்க் கோவை வுளி மருருங் கண் புகைச்சல் காது மந்தம்
யேங்கியே யெய்ப்பிளைப்பு மேல்க் கால் நோவு இயல் கெட்ட தாது செய மெரிச்சல் காந்தல்
நீங்கியே போவதற்கு மண்டலந்தான் நேராக ஒன்றை விட்டு ஒரு நாளென்னே.

109. என்னவென்று யின்னமொரு தயிலஞ் சொல்வேனினி தான வேம்பிட பட்டை வாங்கி
உன்னவென்று கால்த் தூலா யிடித்துப் போடு ஒரு நாழி நீரிலிட்டு வறிக் காய்ந்து
சொன்னதொன்று எட்டொன்றாய் வடித்து வாங்கிச் சுருதி பெற எண்ணெ யிரு நாழி விட்டு
நன்னயமா மேலமது பலந்தான் ரெண்டு நலமான கசாயத்திலரைத்துப் போடே.

110. அரைத்துடனே காச்சியது மெழுகதாகல் அனலாற்றி வடித்து வைத்து முழுகும் போது
நிரைத்திட்ட வாத மெல்லா மெங்கே போச்சு நிசமான சூலையொடு மூட்டரோகம்
திரத்திட்ட கருதலையு மேல்க் கடுப்புச் செங்கரப்பன் புண் புரைகள் சேரப் போகும்
முரைத்திட்ட தயிலத்திறத்தி மெத்த வுத்தமனே தயில மொன்று உரைக்கிறேனே.

111. உரைக்கிறேன் குமந் தொட்டி வேர் தான் கேளு ஓர் நிறையாய்க் கால்த் தூலா யிடித்து
நிரைக்கிறேன் காளி நீரெட்டொன்றுக்கி நேரான எண்ணெ யிரு நாழி விட்டுக்
கரைக்கிறேன் கசாயத்திலரைத்து மை போல் கசகசா யிரு பலந்தான் கண்டு கொள்ளு
நரைக்கிறே னென்பதென்ற வாதமெல்லாம் நடு நடுங்கி ஓடுமடமா நயந்து காணே

112. நயமான கொடிவேலி வேர் பலந்தான் பத்து நன்றாக யிடித்திட்டுப் பதக்கு நீரில்
வயமாகக் காய்ந்து வத்தி யெட்டொன்றாகல் வளமான நல்லெண்ணெ நாழி விட்டு
நியமாவின் வெண்ணெ புன்னைக் காயளவு யிட்டு நிலையான நற்சரம் பலந் தானென்று
செயமாக அரைத்துனைப் பாகில்ச் சேர்த்துச் சீரான மெழுகு பதமான போதே.

113. ஆனவுடனதை வடித்து முழுகும் போது ஆனந்த வாய்வுடனே அந்தரமாம் வாய்வு
தேன் மருங்குழலே கேள் வாத மெல்லாம் சிற சொரியுந் தினவு முதல் சிரங்கு குஉட்டம்
போனதொரு அ ரயாப்புக் கிரந்தி சூலை புண் புரைகள் பொடிப்பு முதல் பிளவீக்கம்
நானென்னவே வந்த நோய்யித்தனையுந் தீரும் நல்லதொரு தயிலமிது நாட்டிப் பாரே.

114. பாரப்பா சீரகந்தான் படிதான் ரெண்டு பதமாக இடித்து நீர் பதக்கில் போட்டுச்
சீரகந் தூக்-படி-தூக்-செம்பு-பக்கா-இ யெட்டிலொன்றாய்க் கசாயம் வாங்கித் தெளிவான எள்ளெண்ணெ
காரப்பா கார்கோ/லரிசி பலம் ரெண்டு கசாயம் விட்டுஅரைத்ததனைக் கலக்கிக் கொண்டு
எரப்பா மெழுகு பதமாக வாங்கி இயல்பாக முழுகி வரக் குணத்தைக் கேளே.

115. குணமென்ன குன்ம மெட்டு வாய்வு பத்துச் மூட்டமொடு கருதலையுங் குண்டமங் கே
மணமென்ன வாந்தி பித்தங் கிறுகிறுப்பு வாயுவினால் வந்ததொரு சோகை பாண்டு
கணமென்ன கண் குளிர்ச்சி உட்டின ரோகம் கபாலத்தில் சூடான கப நீர்க் கட்டு
பணமென்ன நோய் தீர மருந்துண்டோ பாரிலே மலைத் தெழுந்த மூலிகைக்
பாரே.

116. மூலிகைகள் வெகு மூலி சஞ்சீவியாய் முளைத்ததே மலை தோறுங் காடு தோறுஞ்
சாலி முதல் வெகுமூலி நாட்டுக் குள்ளே சாதகத்தை அறியார்கள் சந்தி மரமப்ப
ஆலிக்கும் வயித்தியன் தான் குணத்தைக் காணான் ஆண்மையிதல் வயற் பிழைக்க

அலை வார்மெத்த

சோலிக்குள் மனதுவைக்க வேண்டாஞ் சொன்னேன் துரையான இருநா றின் முறையைப் பாரே.

117. நற்றிலே யின்னமொரு தயிலஞ் சேரு நறுக்குள்ள சூரிய உலாவுங் கால்தான்
சுத்திலே நீர் பதக்கிடிக்கப் போட்டு ஒரு விறகாய்க் காய்ந்த வத்தி. யெட்
டொன்றுக்கிச்
சாற்றிலே வடித்ததனை எண்ணெ நாளி தான் விட்டுக் கற்க வகை சாற்றக் கேரு
சோற்றிலே ஆரமாத்தைக் காடி நாளி சுக்கதிலே பலமொன்று அரைத்துச் சுட்டே.

118. சுட்டியே மெழுகு பதமாக வாங்கி தோணவே முழுகி வர மண்டலந்தான்
ஒட்டி விடுங் கிரந்தி மட்டஞ் சூலை வன்மம் உண்டு விடுங் கிருமி யெல்லா முள்
மூலத்தை
மாட்டியே நீர்களெல்லாம் வாங்கிப் போடும் வாங்காத பீனிசமும் மண்டை சூலை
காட்டிகமாய்த் தீர்த்து விடுந் தயிலப் போக்குச் சஞ்சீவி போலவுந்தான் சாத்தி
னேனே.

119. சாத்தியின்னம் வகை சேரு கீழ்காய் நெல்லி சமூலமாய்க் கால்த் துலாயிடித்துப்
போட்டு
ஆற்ற நீர் நாளி விட்டுக் கசாயஞ் செய்து அப்பனே எட்டொன்றும் வடித்து வாங்கி
வார்த்திடுவார் யெள்ளெண்ணெ படிதான் ரெண்டு வளமான சற்கரை தான் பலந்தான்
ஐந்து
ஏற்றியே காச்சி விடு மெழுகதாக இயல்பாக முழுகி வரத் தீரும் நோய் கேள்.

120. கேளடா பித்தமென்ற தெல்லாம் போகும் கிறுகிறப்புத் தலை சுழற்றல் வாய் நீரூறல்
நாளடா ரெத்த பித்தம் வெறித்த பித்தம் நலமான மெய்ப் பிளைப்புப் பித்தரோகம்
சூளடா மஞ்சள் நீர் ரெத்த மூத்திரம் சுழற்றலுடன் உட்டிணங்கள் சூடதெல்லாம்
வேளடா மேலெரிவு கை கால் காந்தல் வெளுத்த சடங் கறுப்பாகும் விதத்தைப்
பாரே.

121. <u>செங்கந் தயிலம்</u>:-
விதம் ரெண்டு சங்கின் வேர்த் தயிலஞ் சேரு. வெட்டி வந்த காலத் துலா மிடித்துப்
போட்டு
பதமாகத் நாளி செல விட்டொன்றுக்கி பாரிலுள்ள எண்ணெ ரெண்டு படிதான் சேரு
அதமான மிளகதிலே பலமரைத்துப் போடு அப்பனே மெழுகு. பதமான வாறே
சுகமாக வடித்ததனை முழுகும் போது சொல்வதென்ன மட்டமொடு சொறி சிரங்கு.

122. சிரங்குடனே கிரந்தி யுடன் சூலை ரோகஞ் செங்கரப்பன் வண்டுகடி சில்விஷங்கள்
மரங்கை போல் வளைக்கின்ற வலி சயவகள் குத்திருமல் வாத சயங் மடி போமென்று
வரங் கொடுக்குஞ் சிவன் சொன்ன வார்த்தை. கேட்டு ஆயி சொல்ல நாள் கேட்டு
வகுத்தினேன் யான்
அரங்கத வாயின்ன மொரு தயிலஞ் சேரு அமுக்கிறப் பலம் பத்து ஆக வாங்கே.

123. வாங்கியே யிடித்ததனைப் பத்துக்கு நீரில் அளந்திட்டுப் படி யெண்ணெ யதனில் சேர்த்து
ஒங்கியதோரிலுமிச்சம் பழச் சார் நாளி ஒக்க விட்டு. மெழுகு பத முட்டிப் பார்த்து
வாங்கியே வடி கொண்டு வைத்துக் கொண்டு சுகமாக முழுகி வரச் சுகக்கைச்
சொல்வேன்
பாங்கியே பீனிசங்கள் பறந்து போகும் பாரிலுள்ள மண்டையிடி பறந்து போச்சே.

124. பறப்பதற்கு யின்னமொரு தயிலஞ் சேரு பச்சை யிஞ்சி சால்த் துலாம் பரிந்திடித்துச்
சிறப்புடனே புளிந்து வடி கொண்டு விட்டுத் தெளிவான நல்லெண்ணெ படிதான் விட்டு
உறையான பசுவின் பால் படி தான் வாரு உசிதமாய் மெழுகு பதமாக வாங்கி
நிறைப்புடனே முழுகி வரப் பருவமாக நிச்சயமாகத் தீரும் நோய் நிகழ்த்துறேனே.

125. நிகழ்த்துறேன் மண்டை யுற சூலை வாதம் நிலை கெட்ட பீனிசங் களைப் பிரிவைப்
புகழ்த்துறேன் சூலையொடு வாதம் வாய்வு பொல்லாத யிளை யிளையிருமல் நெஞ்சில்
அகத்தெரிவு கால் கடுப்பு மெய் நோவெல்லா மகமமே சுட்ட மென்ற தனைத்துங்
கேளு
செகத்திலே நாடாமலோடிப் போகுஞ் செம்முள்ளி என்றதனைச் செப்புறேனே.

126. செப்புறேன் செம்முள்ளி பலம் நாறு என்னவே உறக்கவே சமூலத் தோடிடித்துப்
போட்டு
ஒப்புறேன் நாளி நீரதிலே விட்டு யுறகவே யெட்டொன்று யுகந்த காச்சி
அப்புறனதை வடித்த எண்ணெ நாழி யதில் விட்டு மெழுகு பதமான வாறே
நப்புறேன் முழுகி வருங் காலந் தன்னில் நன்றுகத் தீரும் நோய் நவிலக் கேளே.

127. நவிலக் கேள் சயமீளை சலரோகங்கள் நாடாத மந்தார காசத்தோடு
கவிலக் கேள் வாதமெல்லாங் காலதோடுங் கசகேவி குறைநோவு கண்ணீர்ப் பாச்சல்
அவிலக் கேள் புண் புரைகள் எல்லாந் தீரும் அரையாப்புக் கிரந்தி முதலண்ட வாதம்
உவிலக் கேள் வீக்கமொடு விஷபாகந்தான் ஒடும்டா யித்தயிலம் உருகும் போதே.

128. <u>சாறணை வேர் தயிலம்</u>:-

சாறணை வேர்த் தயிலம்:-

128. உருகவே யின்னமொரு தயிலங் கேளு உறைப்பான சாறணை வேர் பலந்தான் பத்து
இறுகவே யிடித்ததனை பதக்கு நீரிலிட்டரைத்து எட்டொன்றுக் கெண்ணெ நாழி
மறுகவே கொதித்ததனை வடித்து வாங்கி மகத்தான மெழுகு பதமானவாறே
குறுகவே வடித்ததனை முழுகும் போது குடி போகும் வாதமொடு வாய்வின் கூறே.

129. **இருவேலி வேர்த் தயிலம்:-**

கூருக பிருவேலி பலம் மூ றப்பா கொத்தாகத் தறித்திடித்து ஊ ணி நீரில்
பேருக விட்டவித்து எட்டொன்றுக்கிப் பேனியே யெண்ணெ பதில் நாழி சேர்த்து
வீருகக் கொதித்து வத்தி மெழுகதாலும் மெய்யிலே பூசியதை முழுகும் போது
தேருத சடமெல்லாந் தேறந் தேறஞ் சீதமுறும் உட்டிணங்கள் சேர்ந்த பித்தம்
மாருத கண் புகைச்சல் கிறகிறப்பு வாங்கி விடு மண்டலத்தில் வரிசையாமே.

130. **அகில் தயிலம்:-**

ஆமிந்த அகில் கட்டை பலந்தான் கேளு அன்பது தான் வாங்கியதைத் தூளாய்ப் பண்ணி
தாமின்வந் தூ ணி நீ ரெட்டொன்றுக்கி தருவான எண்ணெயதில் நாழி சேர்த்துப்
போமின்ன மெழுகு பதமான வாறே புகழாக வடித்து நீ முழுகும் போது
வேமின்னம் நீர்த் தோஉ மெல்லாந் தீரும் மேகங்கள் தீருமென்று விளம்பினேனே.

131. **அறுகம் வேர்த் தயிலம்:-**

விளம்பினேன் அறுகம் வேர் பலந்தானாறு மேலுள்ள பச்சை யெல்லாந் தள்ளிப் போட்டு
தளம்பினே னொன்றுதே யிடித்துக் கொண்டு தண்ணீர் தானாறு படி யதிலே வார்த்துக்
குளம்பாகக் காச்சியே யெட்டொன்றுக்கிக் கூமாக வடிகொண்டு எண்ணெ நாளி
பளம் போல மெழுகு பதமான வாறில் பருவமாய் வடித்ததனை மூழ்குவாயே.

132. மூழ்கியே வரும்போது மூத்தைக் கேளு மூலத்தில் சூடடனே கபால சூடு
தழுவியே பித்த மெல்லாந் தலை கெட்டோடுந் தன்மைக்குள் வாதமெல்லாந் தவறுண்டே போம்
அழுகியே வரு கிரந்தி சூலை நீர்கள் அளன்ற தொரு வயறெரிவு நெஞ்சில் நோவு
கொழுகியதோர் மேல் வரட்சை நீர்க் கடுப்புக் கோவித்த அக்கினியுங் குறுந்து போமே.

133. குளிர யின்னம் வகையொன்று சொல்லக் கேளு கொடுப்பை நீர் படியொன்று யெண்ணெ யொன்று
தளிரான கோட்டமதில் பலந் தாளென்ச தன்றுக்குள் பசுவின் பால் விட்டே யாட்டி
எளிதாகக் கரைத்து விடு மெழுகு போலே யினிதாகவே வடித்து இயல்பு கேள்
நளினமாய் முழுகி வர மண்டலத்தில் நயமாகத் தீரும் நோய் நவிலக் கேளே.

134. கேள்ப்பதென்ன பத்தமெல்லாங் கெடி கெட்டோடுங் கிற கிறப்பு மண்டை யிடி
கெசநீர் தாகம் பாள்த்த தொரு உள்ச் சுரங்கள் உட்டிணங்கள் படுபாவி மேலெரிவு கை கால் காந்தல்
தேள் போன்ற கண்ணெரிவு சிரசில் சூடு தேகவலி யெரி வென்மந் தீர்ந்து பின்னும்
வாள் போன்ற கண்ணுக்குந் தெளிவுண்டாகும் மகத்தான தயிலமிது வணங்கிச் செய்யே.

135. **பொன்னுங்காணித் தயிலம்:-**

செய்யவே யின்னமொரு செய்தி கேளு செகத்திலுள்ள கையான் சாறு படி தானென்று
வெய்யவே கற்றாளஞ் சாறு படி யொன்று விளம்புறேன் நெல்லிக்காய் சாறதாரும்
முய்யவே படியொன்று முன்மங் கேளு உறகவே எள்ளெண்ணெ படி தானென்று
மெய்யான சாதிக்காய் பலந் தானென்று விபறுகவே யிடித்து அரைத்துப் போடு.

136. போட்டதனை மெழுகு பதந் தனில் வாங்கி புகழாக வடித்ததனை முழுகும் போது
தாட்டிகமாங் கண்ணெவு தலை நோவோடு தளமான செவி நோவு சார்ந்த பித்தம்
ஓட்டி விடும் உட்டிணங்கள் பீனிசங்கள் ஒளிந்து விடுமென்று முனி புரைத்த வாறு
நாட்டிலுள் ளோர்க்கின்ன மொரு தயிலஞ் சொல்வேன் நலமான சவரி பலம் நாழ வாங்கே.

137. பலம் நாழி தானிடித்துத் தூ ணி நீரில் பக்குவமாய்ப் போட்டு வத்தி யெட்டொன்றுக
சலமதனை வடி கொண்டு எண்ணெ நாழி சிறக்கவே விட்டு இரண்டுஞ் சேர்த்து கொண்டு
நலமாகக் கருஞ்சீரகம் பலந் தானென்ச நாட்டி யரைத்திதுள்ளே கரைத்து எற்றி
பலமான மெழுகு பதமானபோது பித்தர்களே வடித்து வைத்து முழுகுவாயே.

138. வாய்ப்பான வாதமெங்கே குட்டமெங்கே வாதத்தி லெழுந்த கரைப்பனெங்கே
காய்ப்பான காய்ப்பெங்கே கழலை யெங்கே கண்டத்தில் வீக்கமெங்கே
கழல் வாதமெங்கே
நோய்ப்பான நோயெல்லா மகன்று போகும் நணுக்கமாய்த் தயில மொன்று நகரக்
கேளு
சாய்ப்பான சென்ன கரப்பட்டை தானும் சாதகமாய்ப் பலம் நூறு தாக்கிடாயே.

139. தாக்கியே யிடித்ததனைத் தூளி நீரில் தருவாக வெந்து வடி யெட்டொன்றாக
நோக்கியே பால் நாளி கூடச் சேரு நன்மையாய் வேப்பெண்ணை படி தானென்று
ஆக்கியே வசம்பதிலே பலந் தானென்று அரைத்து நீ கரைத்து விடு மெழுகு போலே
தூக்கியே வடித்ததனை முழுகிலுக்கால் தடியான வாத மெல்லாஞ் சுழன்று போகும்.

140. போகவே யின்னமொரு தயிலங் கேளு புகழான ஆவிட பட்டை பலம் நூறு
சாகவே யிடித்ததனைத் தூளி நீரில் சாதகமாய்ப் போட்டு வத்தி யெட்டொன்றாக்கி
வேகவே யெண்ணெயதிலே படிதான் விட்டு வேப்பெண்ணெ யதில் பாதி கூடச் சேரு
நாக வல்லிச் சாறு மதில் படி தான் சேரு நன்றாக மெழுகு பதமான போதே.

141. பதமாக முழுகி வரத் தீரும் நோய் கேள் படுபாவி வாதமெல்லாம் பறந்து போகும்
இதமான யின்னமொரு தயிலங் கேளு யிடித்திடு வாயிருப்பவல் தான் பலம் நூறப்பா
சிதமான தூளி நீர் தன்னில்ப் போட்டு எட்டொன்று வத்தியபின் வடித்துக் கொண்டு
சுகமாக ஏரண்டத் தெண்ணை படி விட்டு சுகமான மரமஞ்சள் தூள் போட்டுக் கிண்டே.

142. கிண்டியே வடித்திடுவாய் மெழுகு பதமாகல் கெடி கலங்கி யோடி விடும் வாதமெல்
லாம்
பண்டிதற்கு யிம்முறைகள் பாட முண்டோ பார்ப்பதற்கு வெகுசுருகு பரிந்து பாரு
கண்டிதமாய்ச் சொல்லி விட்டேன் சுருக்கு மெத்தக் கதி கெட்ட நோயாளி நோய்
தீர வென்று
உண்டு கொண்டு யிருப்பதற்குச் சொன்ன முண்டாம் உத்தி யிந்த நூல் முறையை பூஷிப்
பாரே.

143. ஊணியே யின்னமொரு செய்தி கேளு உனக்குத் தயிலமொடு கிருதஞ் சொல்வேன்
காணியாம் பொன்னாங்காணி வேர் பலந் தானென்று கனமான வெட்டி வேரிராமிச்சம்
வேர்
பூணியே ஓரிதழ் வேர் சிறுகீரை வேர் புகழாக வகைக்கு ஒரு பலமதாகப்
பாணியே பால் வார்த்து அரைத்து நெய்யில் படி ரெண்டுக் குளிட்டுக் காச்சு காச்சே.

144. காச்சியே உள்க் கொள்ளக் கறண்டி வீதம் கணைரோகம் பதினெட்டுங் காணாதோடும்
ஆச்சுதே உள்ச்சுரங்கள கன்று போமே அணுகாது உட்டிணங்கள் சீரங்கள் மேகம்
போச்சுதே வறட்சை யொடு உள்ரோகம் புண்ணை அக்கரங்கள் போக்குஞ் சொன்னேன்
ஏச்சுதே யெண்ணுதே யிடு சாதிக்காய் யினிதான அதிமதுரம் மாயக்காயே.

145. காயொன்று வகையொன்று களஞ்சு வீதம் கரைத்திடுவாய் காச்சு முன்னே
நெய்யிற்றள்ளே
தாயென்று யின்னமொரு கிருதஞ் சொல்வேன் சதாவேரிக் கிழங்கிடு சாறு நாளி
வாயென்ற திரிகடுகு திரிபலாதி வகை வீதங் களஞ் சொன்று நறு நெய் நாளி
ஏயென்ற எரியிட்டு மெழுகதாக இறக்கியே வடித்திடுவா யியல்பு தானே.

146. இயல்வாகக் குடித்திடுவாய் கறண்டி வீத மெடுத்த தொரு கரப்பனெல்லா மிறங்கிப்
போகும்
முயலான நீர் விடங்களெல்லாந் தீரு முருங்குகின்ற வாயுவொடு இரைச்சல்போகுஞ்
செயலான பித்தமொடு சிலேற்பனங்கள் செளி யிருமல் கிறுகிறுப்புச் செரியா மந்தம்
அயலான கிருமிகளும் அத்துப் போகும் அதிகமா யின்னமொரு கிருதங் கேளே.

147. கிருதமாந் திரிகடுகு திரிபலாதி கேளப்பா வகை யொன்று பலந் தானென்று
நறுதமாஞ் செலம் பத்துப் படியிதுள்ளே நன்றாக யிடித்து வத்தி யெட்டொன்றாக்கி
விருதமாய்ப் போகாமல் மெழுகுதாக வியகை வடித்ததனை வைத்துக் கொண்டு
சிறுகவே கறண்டி நிறை கொள்ளும் போது தீருகிற வியாதிதனைச் செப்பக் கேளே.

148. செப்புகிறேன் சீரகமு மோமங் கூட்டிச் சீராகச் சூரணித்து வைத்துக் கொண்டு
இப்புவியில் வெருகடி தான் நெய்யில் கொள்ள யிரி யிரெட்டுக் கரப்பனொடு சிரங்கு
குட்டம்
நப்புகிறேன் கிருமியொடு அசீரணங்கள் நாடாது கிரந்தியொடு கிராணி மூல
மெப்போதும் நாடாது புவியுள்ளோர்க்கு இன்னமொரு கிருத வகை யியம்பக் கேளே.

149. இயம்பக் கேள் தூதுனை தான் பலந்தான் பத்து இயல் கண்டங் கத்தரி தான்
பலந்தான் பத்து
சுயமான தூளசியது பலம் பத்தாகும் சுயமான தோடையது பலம் பத்தாகும்
நயம் பெறவே விட்டுணுக் கிராந்தி பலம் பத்தாகும் நன்றான பிரமியது பலம்
பத்தாகும்
செயமாக யிதை யிடித்துத் தூளி நீரில் இட்ட விட்டு எட்டிலொன்று யிறுத்துக்
கொள்ளே.

150. இறத்திடவே வெள்ளையொடு நெய்யன் கேளு இதமான சித்தரத்தை திப்பிலி யிரண்டு
மறத்திட்டு வகைக்கு அரைப்பலமதாக வடி மெழுகு போலரைத்து செலுத்திக் கிண்டி
முயத்திடவே போகாமல் வடித்துக் கொண்டு முக்கியமாய்க் கறண்டி நிறை யெடுத்து கொண்டு
முக்கியமாய்க் ஓறத்திட்டுக் கொண்டாக்கால்த் தீரும் நோய் கேள் உத்ததொரு
விரும லெல்லா மோடிப் போமே.

151. __திரிகடுகு_கிருதம்:-__
ஓடிப் போந் தேன் கூட்டிக் கொண்டாயாகு மற செயன் களிப்பைப் பீளை சுரப்பு கக்கல்
நாடிப் போம் வாய்வோடு கபக் கட்டெல்லாம் நாடாமலோடி விடும் நனிமாக
தேடிப் போம் திரிகடுகு நெற்பொரியுங் கூட்டித் தேனிலே தின்ற விடு கிருதஞ் சேர்த்து
தேடிப் போம் கொண்டிடவே சொன்ன நோய்கள் செயமாகு மென்றருளிச் செய்த வாறே.

152. செய்தபடி சன்னிக்குத் தயிலமொன்று செப்புகிறேன் வசம்புடனே வெள்ளையுள்ளி
உய்தமுள்ள நிலவேகு முசுமு முட்டை யுறைப்பான தென்டுட்னே கோளிமுட்டை நெய்
நாளி வேப்பெண்ணெ நாளி கூட்டி நிறையாக வகைக்கு ஒரு பலமாய்ச் சேர்த்துப்
பெய்யுகின்ற ஆமணக்கினெண்ணெ நாழி பேராக வடித்ததிலே விட்டுக் கொண்டு.

153. கொண்டு விட எண்ணெக்குக் கிளியைக் கேளு கூறுள சுக்கிடித்துக் கிளியைக் கட்டி
நின்ற விட்டுச் சுட வைத்துக் கிளியைக் காச்சி நில வரமாய்க் குத்தி விடச் சன்னி
வாதன் கின்ற செய்யும் வலியஞ்சும் சிதறிப் போகும் தீராத சன்னிகளுக்குள்ளே கொள்ளு
இன்ற விட நாளைக்குத் தீருமென்று எளிதாக யித் தயில மியம்பிமேமே.

154. __நவச்சார_மெழுகு:-__
ஐயம்புகிற வகையொன்று சொல்லக் கேளு எருக்கிலேயின் பாலுமுக்கு கள்ளிப் பாலுமுக்குச்
சுயம்பான நவச்சாரன் களஞ்சு பத்து சுகமாக விட்டரைத்து மெழுகதாக
நயம் பெறவே ஆமணக்கினெண்ணெ சேர்த்து நலமான செம்பதனில் அடைத்துக் கொண்டு
சய்மான பெருவயறு மகோதரங்கள் தளமான நீராம்பல் விடபாக மென்னே.

155. பாகமாய் மிளகளவு குன்றி முத்து பகருகின்ற கண்டைக்காய் வீதங் கொள்ள
வேகமாந் தீரை கழு மல பந்தங்கள் விட்டு விட வேறுமு மென்றுல் வென்னீர் கொள்ளு
நாகமாம் விடமும் போன்ற விடங்களெல்லாம் நாடாது பேதித்து வாங்கிப் போகும்
ஏகமா யிம் மருந்து கொண்டாயாகுல் லேழு நாள்ப் பால் கொள்ள இயல்வதாமே

156. __அக்கினி_குமாரன்:-__
தாமென்ற மேனிச் சூரணமே செய்து தான் கரிய சீரகமுஞ் சூரணித்து
நாமென்ற நாற்பது நாட் கொள்வீராகுல் நாடாது வாயுவொடு மந்தமெல்லாம்
சாமென்ற தீபனங்கள் நன்றுய் வாங்கும் சனத்திலே மந்த மெல்லாந் தவறுண்டே போம்
போமென்ற சில் விடங்கள் எல்லாந் தீரும் புதுமை சேரக்கினி குமாரன் பொடி தாமே.

157. __நீர் மேகத்துக்குப்_பொடி:-__
பொடியான பொடியொன்று சொல்லக் கேளு புகழான சீரகமோ பலந்தாளென்
செடியான ஓரிதளின் பொடி பலந் தாளென்று செஞ் சந்தனப் பொடிதான் பலந் தாளென்று
வடியாக வடி கொண்டு வைத்துக் கொண்டு வளமான நற நெய்யில் குழைத்துக் கொள்ளத்
தடியான உட்டிணங்கள் உள்ளு ரோகஞ் சுறக்கான நீர்க் கடுப்புப் பிரமேகந் தான்.

158. மேகமொடு உள்க் காச்சல் எரிவு காந்தல் வியகுகை எரித்த குன்ம மெல்லாந் தீரும்
போகமுறு மெலும்புருக்கி பொங்காத நீர்த் தாகம் புண்ணு நெஞ்சில்
வேக்முறுவாய் நாற்றம் மேல் நாற்றங்கள் ஓடி விட்டோடிப் போவதற்கு விருசு போடு
கூகைநீர் கஞ்சாவுஞ் சாதிக்காயுங் கூட்டியே அவின் குருசாணி ஒடு.

159. குருசாணி வகையொன்று பல மொன்றுகும் நீரா சாணி-குருசாணி-வகையெசன்து யாய் வடித்துச் சூறணித்து பலமொசன்றுகும்
நேராக கருவேம்பின் சூரணஞ் சேர்த்து உராசாணி வாளைப் பூ புட்டவியவிட்டு
உறுகவே புளிந்த சாந் தனிலே கொள்ள முராசாணியான தொகு கடுப்பு ளைச்சல்
மூலத்தில்க் கிராணி யொடு 'முழங்கும் வாயு.

160. முழங்கவே வகையொன்று சொல்லக் கேளு முதண்டக் கொடுவேலி சூரணித்து
விளங்கவே படியொன்று சீனப் பாகு வீருகப் படி யொன்று மேவிக் கட்டி
களங்க மறக் கார்கோலரிசி படி யொன்று கருஞ் சீரகத்துடனே நற்சீரகங் கட்டி
புளங்கவே வகை யொன்று படி யொன்றாக புளிதமாய்ச் சூரணித்துப் புகழ்ந்து வைப்பே.

161. வைத்திட்ட சூரணந்தான் தேனிற் கொள்ள வரு சூலை கிரந்தி குட்டம் வாதம் வாயு
வெந்த்திட்ட வண்டுகடி வெறுப்பு புழுவெட்டு விஷகடியு மெலிகடியும் விரைந்து போகும்
கைத்திட்டமாகவே சொல்லி வைத்தேன் கனமான மிளகு நீர்க் கசாயங் கொள்ளே.

162. கொள்ளவே மண்டலத்தில் தீருந் தீரும் குணமாக பின்னொரு வகையைக் கேளு
பிள்ளையில்லாதவர்களுக்கு மருந்து சொல்வேன் புகழான பேய்க் கெமட்டி வித்து நேர்வாளம்
உள்ளபடி சரி சமனாய்க் குளித் தயிலம் வாங்கி யுமமஞ்சள் பொடியதனில் கொன்றாகும்
வள்ளலெனும் தயிலமது காசொன்றாகும் மத்தித்துக் கொண்டு விடக் கெற்ப வாழ்வே.

163. கெற்பமது வாழ்வதற்கு மருந்து வேறே இலேசிக்க வேண்டாங் காண் நோவு தீரும்
செப்பமுடன் மருந்து கொண்டால் வெந்நீர் கொள்ளு தெளிவாகப் பேதிக்குக் கஞ்சி கொள்ளு
உப்பறவே மூன்று நாள்க் குளித் தயிலம் முதலா நீ யுமதியாய்க் கொண்டு விடு ஒரு போதன்று
அற்பமென்று நினையாதே உமதியாம் அதை விட்டு பின்னமொரு அடவு கேளே.

164. அடவான கொம்பரக்குக் குந்திருக்கம் அளொன சாதிக்காயாவின் குருனி
திடமாகச் சூரணித்து நல்லெண்ணெக்குள் திறட்டியே கொண்டு விடு சிற. புண்ணைக்காய்
குடலோடு பத்துகின்ற கிருமி மூலங் குத்தண்ட வயத்து ளைவு மூலச் சூடு
கடல் போலவே வந்த கடுப்புப் போக்கேன் கன்னடைக்கும் புண்ணாறுங் கண்டவாறே.

165. கண்டதொரு செய்தியொன்று சொல்லக் கேளு காதிலுள்ள வியாதி யெல்லாங் கட்டாய்த் தீர
விண்டபடி முசுறு முட்டை பூகைந்தான் வெத்தியுள்ள நண்டிறைச்சி வெள்ளையுள்ளி
கொண்டபடி கோளி முட்டை வசம்புகுக்கில் குணமாக வகை களஞ்சு கட்டியே தான்
பண்டாறும் வேப்பெண்ணை தன்னில் வெந்து பதமாக வடித்ததனைக் காதில் பாச்சே.

166. பாச்சியே யடைத்திடுவாய் பத்து நாளில் பளிச் சென்று செவி கேட்கும் சீப் பாச்சல் தீரும்
ஆச்சியாங் குத்துளைச்சல் புழுவுந் தீரு மடைப்பு விடுங் காதிரைச்சல் மந்து போகும்
வாச்சுதே பின்னமொரு வரிசை கேளு வாயிலுள்ள வியாதி யெல்லா மகன்று போம்
பாச்சையாம் பூச்சிதனைப் பாக்கில் கூட்டி பச்சையாய்த் தின்றிருக்கப் பல்க் குத்துப் போமே.

167. <u>குத்து விட் மூளப் புறண்டி வேர்க் கசாயம்</u>:-
கொப்பளிக்கப் பல்லறனி தந்த சூலை யத்துப் போம் அலைந்த பல்லு முறைத்துப் போகும்
அழுக்க மெல்லாந் தீர்ந்து விடு மதின் பின் கேளு செத்துப் போம் நாக்கில்
வருஞ் சிங்க ரோகம் தீரவொரு மருந்து சொல்வேன் சிவன் வேப்பின் வேர்
முத்துப் போல் பல் விளக்க முப்பது நாள் முன்றயான நோய்களெல்லா முழுதும் போமே.

168. முழுதமே போகவொரு மருந்து சொல்வேன் முதண்ட வேல் வெள்வேல் குமிள் தான் வன்னி
பழுதில்லா மருந்துடனே குண்டலமாம் பாலை பருத்த எருக்கிலையோடு பலாசு மழுக்காரை
தொழுது நீ பட்டையது சமனாய்த் தாக்கி சுகமாகத் தாணி நீர் தனிலே போட்டு
பழுது படக் காச்சியதை வடித்துக் கொண்டு வளமான சம்பீரச் சாறு நாளி.

169. நாளியுட னெள்ளெண்ணெ நாளி விட்டு நலமான திரிசு வெள்ளைக் குந்திருக்கம்
வெளியுடனே வகைக்கு நாள் களஞ்சு வீதம் விதமாகப் பொடித்திட்டு வடித்துக் கொண்டு
கோளியுட ரெத்தம் விட்டுக் கொப்பளிப்பாய் சூவடுகளிற் கட்டு முதல் குலைந்த பல்லு
வாளியென்ற வீக்க முதல்ப் புண்களெல்லாம் வாங்கிப் போம் வளமாகும் வரிசை பாரே.

170. <u>குமட்டிக்காய் யெண்ணெ</u>:-
பார்பதற்கு பின்னமொரு செய்தி கேளு பாகவிலைச் சாறுடனே குமட்டிக் காய் சாறு

வேப்பிலை காய்ச் சாறு எருக்கிலையின் சாறு வீளியுட யிலைச் சாறு வகைக்கு நாளி
சேர்ப்பதற்கு வேப்பெண்ணெய் ஆமணக்கினெண்ணெய் திரளவே மெழுகு பதஞ் சேர வாங்கி
தாப்புடனே காசிடையாய்க் கொண்டபோது சலக் கட்டு மலக் கட்டுப் புழுக் கிருமி.

171. கிருமி யென்ற கிருமி யெல்லா மொழிந்து போகும் கெற்பத்தில் கிருமியெல்லாங் கெடிகெட்டோடும்
வருமி யென்ற வாயு வெல்லா மண்ணுப் போகும் வாதமொடு மலக் கட்டுத் திரண்ட வாய்வு
ஒருமித்த நோய்களெல்லா மோடிப் போகும் உலகத்திலிது சரக்கு வுரைத்துப் பாரு
கருமமென்ற வகையெல்லாஞ் சொல்லி விட்டேன் கசாயத்தின் வகை யெல்லாங் கட்டுறேனே.

172. கட்டுகிற குறுந்தொட்டி வேர்க் கசாயங் கால்ப் பலந்தான் சீரகமும் காலாய்க் கூட்டி
ஒட்டுகிற இரு நாளி நீரிலிட்டு உழக்காகக் காச்சி யதை யிருபோதுண்ண
முட்டுகிற மூன்று நாள்க் கொண்டாயானால் முறைச் சுரமும் விடாச் சுரமும் மூல வாய்வு
விட்டு விடும் பித்தமுடன் வாதந் தீரும் விளம்புறே யின்னமொரு விதங்கள் தானே.

173. விதமென்ன வெட்பாலை சீரகமுங் கூட்டி வீருக வகைக்குக் கால் பலமதாக்கி
இதமுடனே இரு நாளி நீரிலிட்டு எட்டிலொன்றாய்க் காச்சியே யிறுத்துக் கொள்ளப்
பதமென்ன வந்த சுரம் பறந்து போகும் படுபாவி பித்த மெல்லாம் பறந்து போகும்
மதமென்ன வாயுவெல்லா மகன்று போகும் வகையாக யின்னமொரு வரிசை கேளே.

174. வரிசையுடன் வில்லை வேர் நெற் ெ றாரியுங் கூட்டி வகைக்குக் கால் பலமாக யிரு நாழி நீரில்
உரிசையுடன் எட்டொன்றாய் வடித்துக் கொண்டால் உடன் வந்த சத்தி விக்கலுடனே போகும்
பிரிசமுட னின்ன மொரு கசாயஞ் சொல்வேன் பேரான முல்லை வேர் வில்லை வேருந்
துரிசான சுக்குடனே வகைக்குக் காலாய்க் கூட்டியே யிருநாளி நீரிலிட்டு.

175. இட்டவித்து எட்டொன்றாய் வழித்தக் காச்சி யெடுத்து நீ கொண்டிடவே விக்கல் வாந்தி
முட்ட விடும் பித்த முடனுளலை தாக முறையானசுரந் தீரு மொளிந்த வாறு
சட்டமுடன் யின்னமொரு செய்தி கேளு தருவான முத்தமொடு விட்டுணு கிராந்தி
இட்டமுடன் கால் பலமா யெடுத்துக் கொண்டு யிரு நாளி நீரிலிட்டு எட்டொன்றுக்கி

176. ஆக்கியே மூன்று நாளிரு போதுண்ண அகண்ட சயமீளை யிளைப்பதிக மூச்சுப்
போக்கிவிடு மதிலேறுடு மிளகு கூட்டிப் போட்டு விடு கசாயத்தைத் தேனில் கொள்ளு
பாக்கியமா யின்னமொரு கசாயஞ் சொல்வேன் பரு நெல்லி தான்றியுடன் கடுக்காய் மூன்றும்
நோக்கியே வகைக்குக் கால் பலமதாக நண்ணிமையாய் மிளகதிலே களஞ்சு கூட்டே

177. கூட்டியே யிருநாளி நீரிலிட்டுக் குலாவியே யெட்டொன்றாய்த் தேனுங் கூட்டி
நாட்டியே திரிகடுகுச் சூரணமேன் பொடியாய் நலமாக யிட்ட குந்தில் சிலேற்பனங்கள்
நீட்டியே கபமிளை யிளைப்புக் கக்கல் நிறுத்துமே சயங்களெல்லாம் நினைவில் காணும்
ஓட்டியே விடுவதற்கு இன்னமொன்று உரைக்கிறே னுலகத்தோர் பிழைக்க வென்றே.

178. வென்றதொரு சந்தனமு மிராமிச்சோடு வெட்பாலை முத்தமொடு சுக்குங் கூட்டி
நன்றெனவே வகைக்குக் கால் பலமதாக நலமாக யிடித்ததனை யிரு நாழி நீரில்
பன்றெனவே யெட்டொன்றாய் வடித்துக் கொள்ளப் பஞ்சதாரையுடனே பத்து நாள் கொள்
சென்றதொரு சுரம் வாயுச் சிலதோடங்கள் சிரத்திலுள்ள பித்த நீர்ச் சேற்ப வாதம்.

179. வாதமொடு தாகங்கள் நீர்க் கடுப்பு மஞ்சளூற பித்தங் காமாலை தீரும்
வேதமொடு யின்னமொரு கசாயஞ் சொல்வேன் வேம்பிலுட பட்டையொடு மிளகு சுக்கு
நாதமுடன் வகைக்குக் கால் பலமதாக நளின முடனிரு நாளி நீரிலிட்டு
போதமுட னெட்டொன்றாய் வடித்துக் கொள்ளப் புழுக் கிருமி வாதமொடு வாயு வெல்லாம்

180. எல்லாமுந் தீரவொரு கசாயஞ் சொல்வேன் யிருவேலி மதுரமுடனிஞ்சி கூட்டிச்
சொல்லாமல் வகைக்குக் கால் பலமதாகத் தாக்கியே யிருநாளி நீரிலிட்டு
வெல்லவே தீ யெரித்து எட்டொன்றுக்கி விதமாகப் பத்து நாள்க் கொள்ளும் போது
வல்லதொரு வாயுவுற பித்தஞ் சோகை வாங்கி விடும் அரோசிகங்கள் வாரா தென்னே.

181. வாராமலின்ன மொரு கசாயஞ் சொல்வேன் மைந்தனே புட்டவியல் மாற்கள் கேளு
தாரான பேய்ப்புடோல் பற்படாகந் தரு கண்டங் கத்திரியுந் துளசி தூது
பாராடா தோடை யிலை சுக்கு சுக்கு பகுவ முறு திப்பிலியு மீருங் கூடச்
சேராமல் வகைக்கு ஒரு பிடியதாகச் சேர்ந்த மருந் தொரு களஞ்சாய்ச் சேர வாங்கே.

182. வாங்கியே யிடித்ததனைப் புட்டவியலாக்கி வளமாகவே பிளிந்து கற்கண்டு தேனும்
ஓங்கியே கொண்டு விடச் சிலேற்பனங் கழுள்ளிரு மழுள்ச் சுரங்கள் வாதம் வாய்வு
நீங்கியே போக வென்று சொன்ன நேர்மை நிச்சயமா மின்னமொரு கசாயங் கேளு தா
தாங்கியே முசுமுசுக்கை விஷ்ணுமூலி தன்றுடனே நிலவேம்பு சங்கங் குப்பி.

183. குப்பியுடன் வகைக்கு ஒரு பிடியதாகக் குணமாகவே யரிந்து சட்டி மீதில்
செப்பமுடன் வைத்த வித்துப் பிளிந்து கொண்டு சேருகிற மருந்து தனைச் செப்பக் கேளு
ஒப்பமுடன் சீரகமுஞ் சுக்குமாக வுடன் வயத்துச் சூரணித்து மேலே தூவி
இப்புவியில்த் தேன் கூட்டி யுன்பிராகில் இட்டமுடன் வாதசுரம் இடைந்து போமே.

184. இடைந்திடவே யின்னமொரு கசாயங் கேளு இயலான நிலவேரு மிஞ்சியுள்ளி
மடந்ரதயரே கொத்தாவும் வேம்பு நெட்டும் வளமான நொச்சியிலை வகை பிடியாய்க் கொண்டு
கிடந்ததொரு மருந்தெல்லாங் களஞ்சு வீதங் கெறவாகவே யிடித்து அவித்து வாங்கிச்
செடந் தனக்குத் தேன் விட்டுக் கொள்வீராகில் செய்ய சுரஞ் சன்னி சுரஞ் சேர்ப வாதம்.

185. வாதமொடு சன்னி யெல்லா மாண்டு போகும் வஞ்சகங்களில்லாமல் மருந்து சொன்னேன்
போதமுடன் கண்டவனே நல்லோருக்கும் பொய்யென்று சொல்வானுல் பொல்லாப்பபா
வேதமுடனிந்த நூல் வெளியாய்ச் சொன்னேன் வித்தையிலே வெகு வித்தை யோக வித்தை
காதமல்ல தூரமல்ல யிரும்பில் செய்து கனதை சூரியவானுய் யிருக்கலாமே.

186. இருக்கவே யின்னமொரு செய்தி கேளு யியல்பான சிவன் வேம்புத் தயிலம் வாங்கி
தருக்கெனவே அம்மூலி சூரணித்து தயிலத்தில் குளப்பியே கொண்டாயானுல்
முருக்கம் பூப் போலாகு மேனி யெல்லா முனையாலே வெட்டுண்ட புண்ணும் போகுஞ்
சுருக்கியதோர் கால் வெடிப்புக் குட்டஞ் சூலை சுமக்கான கடி விஷமுந் தோற்றுப் போமே.

187. தோற்கவே யின்னமொரு தயிலங் கேளு சுருதியாய் மாறணி வேர் தயிலம் வாங்கி
ஆற்கவே அம்மூலி சூறணித்து அதிற் குளப்பிக் கொண்டிடவே மண்டலந்தான்
ஊற்கமுள்ள குட்டமெல்லா மொழிந்து போகும் உடன் வந்த வெகுப்பெல்லா மோடிப் போகும்
சேற்கவே யின்னமொரு செய்தி கேளு சேங்கொட்டைத் தயிலமது இறக்கிக் கொள்ளே.

188. இறக்கியே பஞ்சாங்கது சூறணித்து இதில் குளப்பித் தின்றிடவே யெல்லா நோயும்
பறக்குமடா நரை திரையும் வாரா தென்னுமை பகர்ந்திட்டே னின்னமொரு செய்தி கேளு
சிறக்கவே வேம்பிலுட தயிலம் வாங்கிச் சீராகப் பஞ்சாங்கஞ் சூறணித்து
நிறக்கவே யிதில் குள்ப்பித் தின்பாயானுல் நீங்காத வாத மெல்லாம் நீங்கிப் போமே.

189. நீங்கிப் போங் குட்டமொடு கிரந்தி சூலை நிலையான நரை திரையும் நிலை விட்டோடும்
ஓங்கியே யின்னமொரு செய்தி கேளு உபதியுள்ள தேத்தாவின் தயிலம் வாங்கி
பாங்கியே பஞ்சாங்கஞ் சூறணித்து பரிவான தயிலத்தில் குளப்பிச் கொள்ள
ஏங்கியே வியாதி யெல்லாஞ் கெடி கலங்கி யிருந்த விடம் விட்டோடு மிருப்புத் தானே.

190. <u>வாலுளுவைத் தயிலம்</u>:--
இருப்பான வாலுமுவைத் தயிலம் வாங்கி யியல்பாகக் கொண்டு விடு மண்டலந் தான்
கருவான நோவெல்லா மோடிப் போகும் கை கண்ட வித்தையடா தயிலப் போக்கு
குருப்பான பிராசிலுட தயிலம் வாங்கி கொண்டிட அ ரயாப்புக் குட்டமெல் லாம்
பொருப்பான பல்லவலவு முதலா யுள்ள பொல்லாத நோவெல்லாம் போகுந் தானே.

191. <u>புரசந் தயிலம்</u>:-
தானென்ற வென் புரோசின் தயிலம் வாங்கிச் சாதகமாய்க் கொண்டு விட மண்டலந்தான்

யேனென்ற பெருவியாதி குட்டமெல்லா மிடைந்து போ மெளிதான தயிலந் தன்னால்
பானென்ற வெள்வேலின் தயிலங் கொண்டால் பல்லெல்லாம் நின்று விடும் பளமையாகும்
ஊனென்ற உவாயிருட தயிலங் கொண்டால் உழதியாம் வியாதி யெல்லாம் ஒளிந்து போகுமே.

192. ஒளியவே யின்னமொரு செய்தி கேளு உத்த கருஞ் சீரகமும் கெந்தகந்தான்
தெளியவே ,பத்துக் கொன்றுகச் சேர்த்துத் திறமாகத் தயிலமது வாங்கிக் கொள்ள
வளியவே வந்த தொரு சிரங்கு குட்டம் வாதமொடு சூலை யெல்லாம் வாங்கிப் போகுந்
துளி யாயுஞ் சீச் சலங்கள் கரப்பான் போக்குந் தோலுரியுந் தமுதலையுஞ் சுத்த மாமே.

193. சுத்தமா யின்னமொரு செய்தி கேளு சுறக்கான அருக்கிருத் தயிலம் வாங்கிப்
பத்துமா யந்த வேர்ச் சூரணத்தில் பாச்சியே கொண்டு விடு மண்டலந்தான்
நித்தமாஞ் சூலையொடு கிரந்தி குட்டம் நீங்காத வியாதி யெல்லாம் நீங்கிப் போகும்
உத்ததொரு செய்தி யொன்று சொல்லக் கேளு உறைப்பான சீனப்பாத் தயிலம் வாங்கே.

194. தயிலத்தில் சூரணித்துக் குளைத்துக் கொண்டால் தளமான சூலை வகை தவமுண்டே போம்
அயிலொத்த விழி மாதே யின்னங் கேளு ஆச்சரியந் தயில மொன்று அருள் செய் வோமே.

195. ஓமென்ற ஓமமுடன் வசம்பு கால்கோர் உறவாகத் தயிலமது இறக்கியே தான்
நாமென்றதிது மூன்றுஞ் சூரணித்து நலமாக அதில்க் குளைத்துக் கொள்வாயானால்
வாமென்ற சன்னியொடு வாதந் தீரும் வளருகின்ற குட்டமொடு சிரங்கு தீருந்
தாமென்ற யின்னமொரு தயிலஞ் சொல்வேன் சாறணையின் வேரிடித்துத் தயிலம் வாங்கே.

196. வாங்கென்ற தயில மெல்லாங் கூலித் தயிலமாக மைந்தனே வாங்கிறதோர் மார்க மாகும்
தாங்கென்ற சாறணையின் சூரணந்தான் தயிலத்தில் குளப்பியே தளமாய்த் தின்னில்
தீங்கென்ற வாத மெல்லாஞ் சிதறிப் போகுந் திசை வாயும் மல பந்தந் தீருந் தீரும்
போங் கண்டா யித்தனையுஞ் சொன்னேன் யின்னம் புகலுவோம் வெந்தோன்றிக் கிழங் கின் போக்கே.

197. கிழங்கிதனை நிழலுலத்தித் தயிலம் வாங்கிக் கேளப்பா அதின் கிழங்கைச் சூரணித்து முஞ் செய்
உளங் குளிரத் தயிலத்தில் விரவித் தின்ன ஒட்டி விடுங் குட்ட மீரொன்பதுந்தான்
களங்க மறத் தீர்ந்து விடு மண்டலத்தில் காய சித்தி யுண்டாகுங் கவனமாகுந்
தளம் பெறவே தான் வருடங் கொண்டாயானால் சகல சித்தங் கை வசமாஞ் சஞ்சீவி போல.

198. சஞ்சீவி போல இந்த நூலைச் சொன்னேன் சண்டாளப் பயல்களுக்கு யீய வேண்டாம்
நஞ்ச---த நூல் நோய்களுக்கு நலமான நோய்களைத் தான் நாட்--துங்
கெஞ்சுவாறுலகத் தானிந்த நூலைக் றி கேட்டாலுங் கொடாதே நீ கேள்வியன்றி
மிஞ்சவே பஞ்சரித்து ரெண்டஞ்செய்து வேணதனை மீய்ந்தாக் காலிதனையே.

199. ஈய்வதிந்த நூல் தொகை தானிரு நூற்றளவு சிகத்திருள்ளோர் பிளைக்க வென்று யிரங்கிச் சொன்னேன்
தாயிருந்த பிள்ளைக்குத் தவக்க மில்லாத் தன்மை யொரு நாளுந் தான்
நன்மையாய்ச் சரக்கை யெல்லாம் நீற்றிக் கொண்டு வாயமுட னென்னையொடு
கிருதஞ் செய்து வைத்திருவா யறுபானம் வயித்தியத்துக்கே.

வைத்திய சூத்திரம் முற்றும்.

***

ச.ச: [illegible]